# திராவிடநாடு


| மலர் 6 | 19–10–47 | இதழ் 21 |
|---|---|---|


## முயற்சிப்பீர்!

[ கூடலூர் சு. வ. தியாகராசன் ]

—*—

மெய்வருந்தி உழைப்பவர்தஞ் செல்வம் யாவும்
மிகஉறிஞ்சி அதற்கீடாய் மீளாத் துன்ப
நோய்தந்தே நலிவுச்செய் 'மது'வுக் கிங்கே
நிகரான கொடுமையிலை, எனவே யந்த
தீப்பழக்கம் தொலைந்திடவே திட்டந் தீட்டித்
திறமுடனே உழைத்திடுநற் றொண்டு செய்யும்
மாப்புனிதர் வாழ்க! வென் போம், அவர்க்கே
மனுவொன்றும் விடுக்கின்றோம் மக்கள் சார்பில்.
மதுவினுமோர் கொடுந்தீநோய் பல்லாண்டாக
மக்கள்பகுத் தறிவைப் பாழ் படுத்தி எல்லாம்
'விதி' யென்ற வீண்சொல்லால் அரிதிற் பெற்ற
மதிவலியை மறைத்தடியோ டழித்துஞ்சாலப்
பெருமையுடன் உலவுமிதே 'பழமை' யாகும்,
புல்லுருவிப் புரட்டர்சிலர் புராண மென்பார்
சிறுமைதரும் இக்கேட்டைச் சிதைத்து மக்கள்
சீரடையுந் துறைகளிலும் முயற்சிப்பீரே!

20-ம் பக்கத் தொடர்ச்சி

களைப் பயின்றவர்கள். பேரறிஞர்கள் பலரின் நூற்களைக் கற்றவர்கள். நீதி நூல்கள் நிறையத் தெரிந்தவர்கள். அரசியல், பொருளியல், சமூக இயல், மதவியல்பலவும் மனப்பாடம் பண்ணினவர்கள். இவ்வளவும் போதாதென்று, ஒவ்வொரு ஆண்டு இறுதியிலும், பட்டம் பெற்று வெளியேறும் மாணவர்களுக்குத், தர்மோபதேசம் தரும் திருவிழாவும் நடத்தப்படுகிறது. இவ்வாண்டு, சென்னை, சிதம்பரம் பல்கலைக் கழகப் பட்டமளிப்புவிழாவில், அறிவுரை ஆற்றும் அருப்பணி, முறையே பம்பாய், சென்னைப் பிரதமர்களுக்குக் கிடைத்து விட்டது. அவர்களும் தங்கள் கடமைய நன்கு செய்துவிட்டார்கள். வேண்டிய அளவிற்கு, ஏன், பிரசங்கத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தால் போதும் என மாணவர்களுக்கு வெறுப்பேற்படும் அளவிற்குஇதோபதேசம் செய்திருக்கிறார்கள்.

இந்த இரு உபதேசியார்களும், வெறும் பிரஜைகளாக இருந்திருந்தால், அவர்கள் கூறியவற்றை அவ்வளவாக எவரும் பொருட்படுத்த மாட்டார்கள். நாமும் கவலையற்றிருப்போம். இரைச்சலில் இது ஒரு ரகம் எனத் தீர்மானித்திருப்போம். இவர்களை அழைத்தவர்களும், இவர்கள் அறிவாற்றலைக் கண்டு காமுற்று அழைத்தவர்கள் அல்ல. அல்லது இவர்கள், கல்வித்துறையில் பலநாள் உழன்று, அதன் பலாபலன்களை அறிந்து, அதனைக் கற்றுத்தேர்ந்த மாணவர்களும் தெரிந்து, தெளிவு பிறந்து, அதற்கேற்பஎதிர்காலத்தை அமைத்துக் கொள்ளவேண்டுமென்பதற்கான நல்லதோர் திட்டம்தரும் திறனுடையவர்களுமல்லர். ஆளவந்தவர்கள் என்பதற்காகவே இவர்களுக்கு இந்த அலுவல் கிடைத்தது.

கல்லூரியைவிட்டு வேளியேறும் மாணவர்களுக்கு, உலகம் மலரணையாக இருக்கவில்லை. கல்முள்நிறைந்த காடு முரடான கட்டாந்தரையாக இருக்கக் காண்கின்றனர். போர்க்களத்தில் நின்றிருப்போர், குடல் சரிந்தோர் கதறலை, கழுத்தறுந்த முண்டங்களை, தோய்ந்த குருதியின் துற்கந்தத்தைச் சகித்துப் பழகிவிட்டதுபோல், வாழ்க்கையில் காணும், வஞ்சம், பொய், சூது, களவு, காமம் முதலியவற்றிற்கும் மிதமிஞ்சிய பொறுமை காட்டிக்காட்டிப் பழகிவிட்டனர். இந்நோயின் நிலைநாடி, தக்க முறையில் சிகிச்சை செய்தாலன்றிக், கற்றவர்கற்காதவர்எவராயினும் இந்த நச்சுப்பொய்கையிலிருந்து கரைசேர முடியாது. சமூக அடிப்படையைப் பெயர்த்தெறிந்துவிட்டு, அந்த இடத்தில் பெரும்பாலான மக்களுக்கு இதந்தரும் மார்க்கத்தைக் காணவேண்டும். இந்தப் பொறுப்பான காரியத்தைச் செய்யத் தகுதியுடையவர்கள் மாணவர்களே யாவர். இதோ திட்டம் தீட்டியுள்ளோம், இதனை நிறைவேற்ற ஒத்துழையுங்களென, மாணவர்க்கு வேண்டுகோள் விடுத்திருந்தால், இந்த இருமாகாணப் பிரதமர்களும், தங்கள் கடமையையாவது செய்தவர்களாவர். ஆனால், இவர்கள் செய்ததென்ன?

‘அடி முடி’ தேடும் ஆத்மார்த்தப் பணியிலே,பட்டம் பெற்ற மாணவர்கள் ஈடுபடவேண்டுமென ஆய்வுரை வழங்கியுள்ளார் சென்னைப் பிரதமர் ஓமந்தூரார். ‘வி. பி.’ கம்பெனிக்காரர்களின் நூற்பட்டி போன்று, பிரதமரின் பேச்சு அமைந்திருக்கிறது. வெறும் கட்டுச்சோறு மூட்டையை அவிழ்த்திருக்கிறார். வரலாற்று உண்மைகளையும், பொய் மலிந்த புராணக் குப்பைகளையும் பிரித்துப் பார்க்கும் பக்குவந் தவறி, அனைத்தையும் ஒன்றுபடுத்திக் குழப்பி இருக்கிறார். இரண்டுக்கும் உள்ள வேற்றுமையைக் காணும் வெள்ளறிவையும், இரவல் வாங்க மறந்துவிட்டார் போலும்!

ஓமந்தூராரோ, ஆளவந்த அமைச்சர்களின் அக்ராசனர். ஆஸ்ரமக் கல்வியை வாயார வாழ்த்துகிறார். அம்முறை மீண்டும் நிலவவேண்டுமென விழைகிறார். ஆஸ்ரம வாசிகளான ரிஷிகள், மும்மலங்களையும் கடந்து, யாக யோகங்கள் செய்து, ஆண்டவனுக்கும் மக்களுக்கும் தொண்டுபுரிந்து வந்தார்களாம். ஆம்! அவர்கள் தொண்டு புரியாமல் இருந்தார்கள் என்று யார் சொன்னார்கள்? கன்னிப் பெண்களுக்குப்பிள்ளைவரம் தந்ததும், காமந்தீர்ந்தபின்காமவல்லியையும்பிறந்தகுழந்தையையும்,ஈடைகெட்டவர்போல் ஏசினதும், மிருக உருவெடுத்தும் சாபத்தைத்தீர்த்துக் கொண்டதும், இயற்கைக்குவிரோதமாக நடந்ததும் ஆரண்ய வாழ்வில் அடங்கியிருக்கிறதே!

நான்கு வேதம், ஆறு சாஸ்திரம், பதினெண் புராணம், அறுபத்துநான்குகலைஞானம், அல்லிஅரசாணிமாலை உட்பட அனைத்தையும் கூறிவிட்டார். எதற்கு இவ்வளவும் கூறினாரோ நாம் அறியோம். அவர் பிரதமரானது பற்றி எழுந்த, அவ்வளவு பழிச்சொற்களுக்கும் பதில் கூறும் போக்கிலே, தாம் கற்றது கற்காதது ஆகிய நூற்கள் அனைத்திற்கும் வரிசைக்கிரமமாக ஒருபட்டி தயாரித்துக் கொடுத்துவிட்டார் போலும்!

ஆத்மாவை மூடுபனிபோல் மூடி இருக்கும் மாயையை விலக்குவதுதான் கல்வியின் முடிந்த லட்சியம் என்கிறார் ஓமந்தூரார். அதாவது ‘காயமே இதுபொய்யடா, காற்றடைந்த பையடா’ எனும் மெய்யை மக்கள் உணர்ந்து கொள்வதுதான் கல்வி பெறுவதின் பயன் என்கிறார். இதைத்தான் குருகுலங்கள் செய்து வந்ததாம். இதனையே, மீண்டும் நமது நாட்டில் நிலைபெறச் செய்யவேண்டுமாம். அருமையான யோசனை!

இவரோ ஆளும் பீடத்தில் அமர்ந்திருப்பவர். இதையெல்லாம் பேசிக் காலங் கழிப்பானேன்? நினைத்ததை முடிக்கும், அதிகாரம் கைவசம் இருக்கிறது. இன்று கல்விக்குச் செலவு செய்யும் பணத்தையெல்லாம் தடைசெய்து விட்டு, கல்விச்சாலைகளை யெல்லாம் மூடிவிட்டு, தட்சண ஹிந்தி பிரசார சபையில் பயிற்சி அளிப்பதில் புகழ்வாய்ந்த ஹரிஹர சர்மாவினுடைய மேற்பார்வையில், குருகுலக்கல்வி போதிக்க, ஒரே உத்தரவின் மூலம் ஏற்பாடு செய்துவிடலாம். செலவும் மிச்சமாகும், தெருவிற்கொரு பஜனை மடம், இப்பொழுதே ஊரெங்கும் இருந்து வருகிறது. பஜனை மடம் இல்லாத இடங்களில், அங்கங்குள்ள முச்சந்திப் பிள்ளையார் கோயில்களையேகூட கல்விக் கூடங்களாக ஏற்படுத்திக் கொள்ளலாம். பஜனை மடங்கள் கலைகப் போய்இருந்தால்கூட, ஒரு காசுச் செலவுமின்றி புதுப்பித்துக் கொள்ளலாம். ஓமந்தூரார் குறித்துள்ள மயன், அவர் அழைப்பு அனுப்பினால் வராமல் இருப்பானா? மேலும் பஜனை மடங்களிலும், நாரதர், பாராசார், பதஞ்சலி, யாக்ஞவல்கியர், மனு முதலிய நீதி சாஸ்திரவிற்பன்னர்கள் படரூபத்தில் எப்பொழுதும் இருந்துகொண்டுதான் இருக்கிறார்கள். அவர்களையே வர

(17-ம் பக்கம் பார்க்க)

இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

விலை 2 அணா திராவிட நாடு ஆண்டுசந்தா ரூ 7

# கடைசிக் கட்டம்

வைதீகர்கள், தமக்கு ஓர் வாய்ப்புக் கிடைத்து விட்டதாகக் கருதிக் களிப்படைகிறார்கள்.

நாட்டுக்குக் கிடைத்துள்ள விடுதலையைத், தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு, சரிந்துபோன தமதுசெல்வாக்கை மீண்டும் புதுப்பித்துக் கொண்டு வாழலாம் என்று மனக்கோட்டை கட்டுகிறார்கள்.

இதற்காக, இப்போது, சாஸ்திரிகளும், கனபாடிகளும், தமிழ் இனத்தவரான சில வைதீகர்களும், ஓயாமல், சளைக்காமல், 'பண்டைப் பண்பாடு' என்பதுபற்றிப் பேசுகின்றனர்.

சுயாட்சியை அடைந்துவிட்டோம், எனவே நாம் நமது பரம்பரைப்பண்பாட்டைப் புதுப்பிக்க வேண்டும் என்று, பேசுகின்றனர்.

பிரிட்டிஷ்பிடி நீங்கியதும், இது போன்றதோர் முயற்சி நடைபெறும், என்பது, நாம் எதிர்பாராததல்ல. பலமுறை, மக்களின் கவனத்துக்கு இதனைக் கொண்டுவந்திருக்கிறோம்.

அந்த ஆசை, சாஸ்திரிகளுக்கு வருவது, சகஜமுங்கூட! ஆசை வெட்கமறியாது எனும் மொழிப்படி, அவர்கள் இப்போது வெளிப்படையாகவும் பேசத் தொடங்கியுள்ளனர். அன்னிய ஆட்சியை எதிர்த்தனர்—ஒழித்தனர்—சொந்த ஆட்சி கிடைத்திருக்கிறது—எனவே, பண்டைய ஆட்சியை ஏற்படுத்துப்படி வற்புறுத்தலாம் — மக்கள் செவிசாய்ப்பர், என்று, வைதீகசாஸ்திரிகள், கருதுகின்றனர். அங்ஙனம் அவர்கள் கருதுவதற்குக் காரணம், ஆங்கில கவர்னர்களும், அதிகாரிகளும், பெட்டிப்பாம்புகளான பிறகும் கனபாடிகளும், சாஸ்திரிகளும், மதிப்புக்குரியவர்களாக, மக்களில் தெளிவற்றோரால் கருதப்படுவது தான். பரங்கியின்பிடியை ஒழித்தது, பண்டைய நாட்களிலே புகுத்தப்பட்ட பார்ப்பனியத்திடம் சரண்புகுவதற்கு அல்ல, என்ற எண்ணம், வைதீகர்கள் மனதிலே பதியவில்லை.

சாஸ்திரிகள், இப்போது, பல இடங்களிலே, பண்டைய முறையை வலியுறுத்திப் பேசுகின்றனர். ஆனால் நாட்டுமக்களின் மனப்போக்கு, எவ்வளவு மாறி இருக்கிறது, என்பதை இந்த வைதீகர்களால் உணரமுடியவில்லை. வர்ணாஸ்ரம ஆட்சி கூடாது என்று வெளிப்படையாகப் பலகாலமாகக் கூறிவரும், சுயமரியாதை இயக்கத்தவர் மட்டுமே தான், வைதீக ஆட்சியை எதிர்க்கிறார்கள் —அந்தச் சுயமரியாதைக்காரர்கள் சிறுகூட்டம், பெரும் கூட்டம், பஜனை மனப்பான்மையும், பிராமண சேவா உணர்ச்சியும் கொண்டு இருக்கிறது, எனவே, அந்தப் பெருங்கூட்டத்தின் துணைகொண்டு, மீண்டும் நமது ஆதிக்கத்தை நிலைநாட்டுவோம் என்று, சாஸ்திரிகள் எண்ணுகிறார்கள். அந்த 'ஏமாளிகள்' அறியாதது ஒன்றிருக்கிறது. சுயமரியாதைக் கட்சியினர், என்று கணக்கிட்டால், சிறுகூட்டம் தெரியும்—ஆனால், சுயமரியாதைக் கொள்கைகளைக், கொண்டவர்கள் என்ற கணக்கெடுத்தால், சிறுகூட்டமல்ல— சனாதனச் சாஸ்திரிகள் சஞ்சலப்படும் அளவுக்கு, ஒரு பெரும் கூட்டம், அஞ்சாநெஞ்சுடன் அறப்போர் நடத்தும் கூட்டம், இருக்கக் காணலாம். எந்தக் காங்கிரஸ்தமிழர்கள், தமக்குக் கேடயமாகுவர் என்று, சாஸ்திரிகள் எண்ணிப் பூரிக்கின்றனரோ, எந்த காங்கிரஸ்தமிழர்களைக் கொண்டு, மீண்டும் சனாதன தர்மத்தை ஏற்படுத்திவிடலாம் என்று மனப்பால் குடிக்கிறார்களோ, அந்தக் காங்கிரஸ் தமிழர்கள், அவ்வளவுபேரும், அவனுசிகளல்ல, ஆரிய தாசர்களல்ல, அவர்களிலே பெரும்பகுதியினர், அடிமைத்தனம் எந்த உருவில் வந்தாலும், ஆதிக்க வெறியர், எந்த மொழிபேசி, என்ன சாகசம் செய்தாலும், எதிர்த்தொழிக்கும் இயல்பினர். எல்லோரும் ஓர்குலம்! எல்லோரும் இந்நாட்டு மன்னர்! என்ற இலட்சியம் கொண்டவர்கள். அவர்களின் கருத்து உறங்கிவிடவில்லை— வீரம் கருகிவிடவில்லை. அவர்கள், அன்னிய ஆட்சியின் அக்ரமங்களைக் கண்டு, கொதித்தெழுந்து போரிட்டதன் காரணம் மக்களாட்சி மலரவேண்டும் என்பதற்கேயன்றி, மமதையாளர்களின் ஆட்சியைக் கொண்டுவர அல்ல!

இதனை அறியாததாலேயே, சில ஆரியத்தலைவர்கள் இப்போது, சற்று வெளிப்படையாகவே, பண்டைய ஆட்சிமுறையை வற்புறுத்துகிறார்கள். ஆனால், அவர்கள் எண்ணம் ஈடேறப் போவதில்லை. நாட்டிலே, இன்று ஏற்பட்டுள்ள, வளர்ந்து கொண்டுள்ள விழிப்புணர்ச்சி, இந்த வீணர்களின் கொட்டத்தைத் தாக்கித் தகர்த்துத் தரைமட்டமாக்கி விடும் என்பதில் நமக்கு ஐயமில்லை. கடைசிமுறையாகச், சனாதனம், ஒரு புதிய முயற்சியில் ஈடுபடுகிறது. கடைசிக் கட்டத்தில்வந்துநிற்கிறது. அறிவும் ஆற்றலும் கொண்ட ஒரு அறநெறிப்படை கிளம்பினால், இனி என்றென்றும் தலைதூக்க முடியாதபடி, இந்த வர்ணாஸ்ரமத்தை, வீழ்த்தமுடியும். இதற்கான 'கூட்டுப்படை' தயாராகவேண்டும். இந்தப் படை தயாராவதை, இன்று சில சாஸ்திரிகளின் பேச்சுத், துரிதப்படுத்துகிறது.

"சுயாட்சியை, யார் பயன்படுத்

தப்பார்க்கிறார்கள் கவனி, நண்பனே!"என்று, காங்கிரசிலுள்ள திராவிடனுக்கு, நாம் எடுத்துக் காட்ட, காங்கிரசிலுள்ள திராவிடத்தோழன், "கவனித்துக் கொண்டுதான் வருகிறேன் இந்தக் கபடர்களின் செயலை" என்றுகூற, இருவரும்கூடிப், புதியதோர் அணிவகுப்பை உண்டாக்குவர். சாஸ்திரிகள், சாகசம் பேசுவது இந்த நிலையை விரைவிலே உண்டாக்கும்.

இதென்ன காலமய்யா! என்ன அக்ரமம்! பார்ப்பனர்மீது இப்படித் துவேஷம் பரவிவிட்டதே! சமஸ்கிருதம் வேண்டாமாமே. இந்திக்கு எதிர்ப்பாமே! சிவ! சிவ! இது கூடாது கூடாது. இதனை முளையிலேயே கிள்ளி எறிந்துவிட வேண்டும், வளரவிடக் கூடாது—என்ற பொருள் படும்படி பேசுகின்றனர் சாஸ்திரிகள். அவர் மனதைக் குடைந்த அந்தக் கிலிக்குக் காரணம் என்ன; எதைக்கண்டு சாஸ்திரியார் அவ்வளவு சீற்றமடைந்தார் என்று ஆராய்ந்தால் ஒருவிஷயம் புலப்படுகிறது. அதாவது, நாட்டிலே ஒரு கூட்டம் இருக்கிறதாம். — அக்கூட்டம் பெரிய காரியமோ, சிறிய காரியமோ-எக்காரியமாக இருந்தாலும் பார்ப்பனத் துவேஷமென்னும் நோக்கத்துடனேயே கவனித்து வருகிறதாம். வகுப்புவாதம் வளர்ந்துவிட்டதாம். இதனால், நாட்டிலே நாகரிகமான பொது வாழ்க்கையே நசித்துவிட்டதாம்.

சாஸ்திரியார், சீறவும் சோகிக்கவும் ஆவேசம் கொண்டவர்போலப் பேசவும் செய்த கூட்டம் எது? அக்கூட்டம் செய்த குற்றம் என்ன? சாஸ்திரியாரின் சோகத்துக்கும் சீற்றத்துக்கும் நாம்தான் காரணம் என்பதை ஒப்புக்கொள்கிறோம். நாம் செய்த குற்றம், நம்மவர் கொஞ்சம் சுயமரியாதையுடன் வாழவேண்டும் எனத்தூண்டியதுதான். அது குற்றமானால், அதனை மேலும் மேலும் செய்யச் சௌகரியமும் சந்தர்ப்பமும் வரவேண்டுமென்றே நாம் விரும்புகிறோம். அதற்காகத் தரப்படும் தண்டனை, சாஸ்திரியார் போன்றவரின் சீற்றமும், சங்கராச்சாரிகளின் 'சாபமும்' கனபாடிகளின் கோபமும், அல்லது ஆச்சாரிகளின் அடக்கு முறையும் என அடுக்கடுக்காக வருவதாயினும், வரவேற்கிறோம். ஒரு பெரும் சமூகத்தின் விடுதலைக்கு என உழைக்கும் நமக்குப் பழிச்சொல்லும், இழிசொல்லும் பரிசாகத்தரப்படும் என்பதையும், நமதுமுயற்சியை அழிக்கப் பல்வேறு படைகள் திரண்டுவரும் என்பதையும் முன்னதாகவே உணர்ந்தும் அவைகளுக்கு நம்மைத் தயார்படுத்திக்கொண்டுமே தான், பாடுபட முன்வந்தோமேயொழிய, என்னநேரிடுமோ, யார் கோபிப்பரோ என்று அஞ்சி அஞ்சி வாழுபவர் நாம் அல்ல!

எதனை வைதீகர் முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும் என்று கூறுகிறாரோ அது முளைத்துச் செடியாகிப் பூத்துக்காய்த்து, பழுத்து இருக்கிறது. சாஸ்திரியார் தூங்கி விழித்தவன் கதைபோல இன்று தோன்றித் துள்ளுகிறார்.

ரோமாபுரியில் பெட்ரீஷியன் [சீமான்கள்] பிளபியன் [ஏழைகள்—கூலிகள்] என்ற போராட்டம் நடந்தபோது, ஆளடிமையாகி, உழைத்து உழைத்து ஊராருக்கு அழுது, உல்லாச உலுத்தரின் அடிமைகளாக வாடி இருந்த பிளபியன் தமது உரிமைகளைக் கேட்க ஆரம்பித்தபோது இன்று சாஸ்திரியார் சீறி விழுந்து, இதென்ன கேடுகாலம்! எனக் கூறுவதைப் போலத்தான், பெட்ரீஷியன் எனும் சீமான் வர்க்கத்தார் சீறினர்.

சரித்திரம், அந்தச்சீற்றத்துக்காக, பிளபியன் தனது உரிமைகளைக் கேட்காது விட்டதாகவோ, அவர்களின் எழுச்சியை, அந்தச் சீற்றம் அடக்கி அழித்து விட்டதாகவோ, கூறவில்லை.

பிளபியன்கள்—பெட்ரீஷியன்கள் என்ற பேதமே அடியோடு நீக்கப்பட்டதைத்தான் ரோம் சரிதம் கூறுகிறது. இடையே ரோம் ரணகளமாக மாறிற்று என்பது உண்மையே! மாளிகைகள் இடிந்தன, மன்னர் போல் மமதையுடன் இருந்தவர்களின் ரத்தம் தரையில் தோய்ந்தது என்பதும் உண்மையே! ஆனால் ரத்தத்தைச் சிந்திச் சாதித்த காரியத்தை, நாம் அறிவைச் சிந்திச் சாதிக்கலாம் என்ற திடநம்பிக்கை மீதே பணியாற்றுகிறோம்.

ரோம் வீழ்ச்சிக்குக் காரணமே, அதன் சமுதாய நிலை தான் என்பது சரிதத்தைப் பார்ப்பவருக்கு நன்கு விளங்கும். இந்நாட்டிலும், அந்நிலை தான் உளது. அதனை மாற்றினாலன்றி நாடு மீள மார்க்கம் இல்லை. எனவேதான் நாம் சமுதாயத்தின் கேடுகளைக் களையும் பணியில் ஈடுபடுகிறோம். அதனால் சிலருக்குத் தமது ஏகபோகம் போகிறதே என்பதால் கோபம் வராமற்போகாது! ஆனால், அதற்காக நாம் நமது பாதையை விட்டு நீங்கவும் முடியாது!

சமஸ்கிருத ஆதிக்கத்தையும் பார்ப்பனியத்தையும் நாம் கண்டிக்கிறோம் எனக்குறை கூறுகின்றனர்.

ஆம்! என நாம் ஒப்புக்கொள்கிறோம். நம்மவர் சமஸ்கிருத ஆதிக்கத்தையும், பார்ப்பனியத்தையும் நிச்சயம் எதிர்க்கிறார்கள். வெறுக்கிறார்கள். ஏன்?

கிளி, கூண்டைக்கண்டால் கொஞ்சிக்கொண்டு உள்ளே நுழைந்து, உல்லாசமாக இருக்க அதுவே ஏற்ற இடம் எனக்கருதாது! அதுபோல் தமிழர் தம்மையும் தம்கருத்தையும் வாழ்வையும் சிறைப்படுத்தும், சமஸ்கிருத ஆதிக்கத்தையும் பார்ப்பனியத்தையும் வரவேற்கமாட்டார்கள், வெறுத்து ஒழிக்கத்தான் விரும்புவார்கள்.

"இது கெட்ட எண்ணம், துவேஷம், இதனை முளையிலேயே ஒழித்துவிடவேண்டும்" எனச் சாஸ்திரியார் கூறுகிறார். சாஸ்திரியார் தமது முழு படைபலத்துடன் வரினும், இதனை அழிக்கமுடியாது என்று முன் கூட்டியே சொல்லவிரும்புகிறோம். ஏனெனில் எதனைச்சாஸ்திரியார் கெட்டது, ஆபத்தானது அழிக்கப்பட வேண்டியது என்று கூறுகிறாரோ, அது மிக இயற்கையாக உண்டாகும் எழுச்சி.

இயற்கையாக எழும் உணர்ச்சியை அடக்கி அழிக்கமுடியாது. அடக்க, அடக்க அது, அமுக்திவைக்கப்பட்டிருக்கும் ரப்பர் பந்து, விட்டதும் மேலே எழும்புவதுபோல மிக மிக மேலுக்குத்தான் கிளம்பும்.

தமிழர் மிகமிகப்பலமாக அழுத்திவைக்கப்பட்டிருந்தனர்.

அவர்கள் ஆண்டவனின் காலில் தோன்றியவர்கள் என்று இழிவாகக் கூறப்பட்டனர்.

அவர்கள் பார்ப்பனருக்கு அடிமை வேலை செய்யவே ஆண்டவனால் படைக்கப்பட்டவர்கள் என்றுகூறப்பட்டது.

அவர்கள் சொத்துச் சுதந்திரம் பெறவோ, அனுபவிக்கவோ இலாயக்கற்றவர்கள் என்றுகூறப்பட்டது.

(17-ம் பக்கம் பார்க்க)

# பாரதி பாதை

எட்டையாபுரத்திலே, தேசியக் கவி சுப்பிரமணிய பாரதியாருக்கு, அழகிய மண்டபம் அமைத்து, சீரிய முறையில் விழா நடத்தினர்.

பரங்கியாட்சியை ஒழித்தாக வேண்டுமென்ற ஆர்வத் தீகொழுந்துவிட்டெரியும் உள்ளத்துடன், வாழ்ந்தவர் பாரதியார். தாயகத்தில்உலவத் துரைத்தனத்தார் தடைவிதித்ததால், புதுவையில் தங்கிப், புதுப்பாதை வகுத்தார் பாரதியார்.

அவருக்கு 'காணிக்கை' செலுத்த ஆட்சி அலுப்பையும் பொருட்படுத்தாது, ஆச்சாரியார் வந்தார்—ஆயிரக்கணக்கான தமிழர்கள் கூடினர்—இசைவாணர்கள்—கலை வாணர்கள்—எழுத்தாளர்கள் பற்பலர்.

'கல்கி' ஆசிரியர், இப்பணியினைத் திறம்பட நடத்தி முடித்தார்-விழாச் சொற்பொழிவுகளில், நாவலர் பாரதியார், சிவஞானக் கிராமணியார், ஜீவானந்தம், நாமக்கல்லார், எழுத்தாளர் சங்கத்தலைவர், பெ. தூரன், ஆகிய பலரும் கலந்து கொண்டனர்.

நண்பர் சிவஞானம் பெருமிதத்துடன் கூறினார், "அதிகாரமற்ற கரம் அஸ்திவாரக்கல் நாட்டுகிறதே என்று முன்புஆயாசப்பட்டேன்—இன்றோ, ஆளும் கரம், மணிமண்டபத்தைத் திறந்து வைக்கிறது கண்டு அகமகிழ்கிறேன்" என்று. உண்மை. வங்கமாளும் ஆச்சாரியார், மணி மண்டபத்தைத் திறந்தார்—வறுமையாளராகக், கவனிப்பாரற்று, நாடு கடத்தப்பட்டு, நலிவுற்றிருந்த பாரதியாருக்கு, நாடு முழுவதும் கொண்டாடும் அளவினதான விழா நடந்தேறியது.

பாரதியாரின், கவிதைத் திறன் அதனாலாயபயன், மறுக்க முடியாதன. பாரதியாரின் தனிப்பண்புகளை, அவரை அந்நாளில் அறிந்தவர்கள் கூறிடக் கேட்டால், புது உலகு காண விழைபவர்களின் அகமெலாம் மகிழும். புரட்சிக்கவிஞர் பாரதிதாசன், பாரதியாரைக் குறித்துப் பேச ஆரம்பித்தால், அவருடைய கண்களிலே ஓர் புத்தொளி தோன்றிடக் காணலாம்.

பாரதியாரின் காலம் வேறு, இக்காலம் வேறு. எனவே இன்றுள்ள எண்ணங்களை எல்லாம், அவர் அன்றே ஆய்ந்தறிந்து கூறியிருக்க வேண்டுமென்றோ, நாம் எடுத்துரைப்பதும், வரலாற்று உண்மையுமான, ஆரிய-திராவிட பிரச்னையை அவர் கூறியிருக்க வேண்டுமென்றோ, நாம் எதிர்பார்ப்பதற்கில்லை. அவருடைய பாடல்களிலே பல இடங்களில், அவர், 'ஆரியர்' என்ற சொல்லை, உயர்த்தியேதான் பாடி இருக்கிறார். அந்தக்காலம், நாமெல்லாம், பள்ளிகளில் 'ஆரிய மதஉபாக்யானம்' எனும் ஏட்டினைப் பாடமாகப் படித்த காலம். நமது தலைவர், தமிழ் நாட்டுக் காங்கிரசிலே பெருந்தலைவராக இருந்த காலம்.

ஆரியர்-திராவிடர் பிரச்னை, ஒரு ஆராய்ச்சி—வரலாறு—இதனை நாம், பாரதியாரிடம் காண்பதற்கில்லை.

ஆரியம் என்பது ஓர்வகைக் கலாச்சாரம்—வாழ்க்கை முறை.

திராவிடம், அதுபோன்றே, தனியானதோர், வாழ்க்கை முறை.

இது, இன்று, விளக்கமாக்கப்படுவது போல, பாரதியாரின் நாட்களில் கிடையாது.

பல ஜாதி—பல தெய்வ வணக்கம்—பற்பல விதமான மூடநம்பிக்கைகள்—தெய்வத்தின்பெயர்கூறிதேசத்தின் பொருளைப் பாழாக்கும் கேடு—இவைகள்தாம், ஆரியம்.

ஒன்றே குலம், ஒருவனே தேவன் இது திராவிடம்.

இரண்டிலே எது நல்லது? எந்தக் கலாச்சாரத்துக்கு, நீர் ஆதரவு தருவீர், என்று பாரதியாரைக் கேட்க, யாருக்கும் வாய்ப்பில்லை. கேட்டிருந்தால், நிச்சயமாக அவர், திராவிட கலாச்சாரத்தையே விரும்பியிருப்பார். அவருடைய பாடல்களில்—பிற்காலப்பகுதிகளில்—இந்தச் சூழ்நிலை இருக்கக் காணலாம்.

பாரதியார் விஷயத்திலே பகுத்தறிவாளர்களுக்குள்ள, மதிப்பு, முதலில், பரம்பரை வழக்கப்படி, அவர் தேவியின் வரப்பிரசாதம் பெற்றதாலோ, முனிவர் அருளாலோ, பஞ்சாட்சர உபதேச பலனாகவோ, பாட ஆரம்பித்தார், என்று அருட்கவியாக்காது விட்டார்களே, அதுதான்.

நாமகளைத் துதித்தார்—நாலைந்து ஆண்டு—பலன் இல்லை — பிறகோர் நாள், அம்மே! இனி நான் உயிர் வாழேன் என்று கூறி நாவை அறுத்துக்கொள்ளக் கிளம்பினார், உடனே களுக்கெனஓர்சிரிப்பொலிகேட்டது, அம்மை பிரசன்னமாகி, பாலகா! பாடு! என்றாள்—உடனே அவர்பாடலானார்—பாடினார், பாடினார், பார் முழுதும் பாடல் பரவும் வரை பாடினார், என்று, பாரதியார் புராணம் கட்டாத வரையில் நமக்கெல்லாம், மிகக் களிப்பு. நமக்குக் களிப்பு என்பது மட்டுமல்ல, பாரதியாருக்கே உண்மையில், பெருமை, அவர், நாமகள், பூமகள், அல்லது வேறோர் தேவனின் அருள் பெற்றவரல்ல, அவர் ஓர் கவி, சிந்தனையில் பட்டதைச் செந்தமிழில் கவிதையாக்கினவர் என்பதனால்தான்.

கூடுமானவரையில், பாரதி விழா சொற்பொழிவாளர்கள், அவருடைய அருமை பெருமைகளை எடுத்துரைக்கையில், 'புராணம்' பேசாதிருந்ததுபற்றி, நாம் மகிழ்கிறோம். அன்பர் ஆச்சாரியார் மட்டும், பாரதியாரை, ஓர் 'முனிவர்' என்று கூறினார். ஆனால அதற்கும் அவர், வழக்கமான பொருள் கூறத் துணியார்.

பாரதியாருக்குள்ள பெருமை. முதலில் இது. மற்றோர் பெருமை, அவர், தம்முடைய நாட்களிலே, மற்றவர்களைவிட வேகமாக முன்னேற்றக் கருத்துகளைப் பாடி, அதன் பயனாக, அவருடைய சமூகத்தாராலேயே வெறுக்கப்பட்டு, "பார்ப்பன மேதைகள்" என்போரால் அலட்சியப்படுத்தப்பட்டு, வறுமையில் வாடி, அன்னிய ஆட்சியாளரின் அடக்குமுறைக்கு ஆளாகி, அல்லலை, அனுபவித்து, அந்த அல்லலால் மனம் உடையாமல், நோக்கம் மாறாமல், அரைக்க அரைக்க மணக்கும் சந்தனமானாரே, அந்தப் பண்பு.

அவருடைய பண்பு, ஜாதிக்கட்டுகளை உடைத்தெறியக் கூடியதாக இருந்தது என்பது அவருடைய கவிதைகளிலே பல, ரசமான இடங்க

ளில் தெரிகிறது.

அவருடைய நாட்டுப் பற்றும் மொழிப்பற்றும், அந்த நாட்களில் நையாண்டிசெய்யப்பட்டது, இன்று, அவருக்கு, மகாகவி என்ற பட்டம் தரவும், பளிங்கு மண்டபம் கட்டவும், தமிழகம் முன் வந்தது. கவிஞரைப் போற்றும் மாண்புக்கும், அதைக் கவர்ச்சிகரமானமுறையிலே நடத்திக் காட்டிய கல்கியின் திறமைக்கும், நமது பாராட்டுதல்.

"பாரதி மண்டபத்தை விழாவுக்காகப் போடப்பட்ட பந்தல் மறைத்துக் கொண்டிருக்கிறது" என்று, அன்று ஆச்சாரியர் பேசினார்.

மண்டபத்தை, பந்தல் மறைக்கிறது!

மண்டபத்தை மட்டுமல்ல! தேசீயக் கவிதைகள்,என்ற ஒரு பகுதியை மட்டுமே, பெரிதாக்கி நாட்டிலே பரப்பிக் காட்டுவதால், பாரதியாரின் முழுஉருவம், மக்களின் கண்களுக்குத் தெரியவொட்டாதபடி, மறைக்கப்படுகிறது.

பாரதியார், தோத்திரப் பாடல்கள் பல பாடினார். ஆனால், தேவார திருவாசகமும், திருவாய் மொழியும் பாடியான பிறகு பாடினார்—எனவே, அவருடைய கவிதைகளிலே, தோத்திரப் பகுதி, முக்கியமோ, அவருடைய பெருமைக்குச் சான்ருே ஆகாது, வைதீகர்களின் நோக்கத்தின்படியே கூட.

பாரதியார், வேதாந்தப் பாடல்கள் பல பாடியுள்ளார்—ஆனால் அவருக்கு முன்னர், தாயுமானாரும், பட்டினத்தாரும்,வள்ளலாரும், பாடிவிட்டனர்-எனவே, அந்தப் பகுதியும், பழபபதிப்பு போன்றதுதான்.

அவருடைய நாட்டுப் பற்றுப் பாடலே, அவருடைய கவிதைகளிலே, மிக முக்யமான, மற்றக் கவிஞர்கள் பாடாத, காலத்திற்கேற்ற, பலன் அளித்த பகுதி.

விடுதலைப் போர் புரிய, அவருடைய கவிதைகள், தக்க கருவியாயின. எனவேதான், வெள்ளையன் வெளியேறிய விழாவுக்கு அடுத்ததாக, பாரதி மண்டபத் திறப்பு விழா நடைபெற்றது.

ஆச்சாரியார் சொன்னார், "அன்னிய ஆட்சியை எதிர்த்து இந்தியாவின் பல்வேறு பகுதிகளில், பல கவிகள் பாடல்கள் இயற்றினர். தமிழர்களுக்கு, தமிழ்க்கவிதானேபயன்படமுடியும். பாரதியார் அந்த வகையிலே, தமிழருக்குப் பயன்பட்டார்" என்று.

ஆக, பாரதியாரின் பக்திப் பாடல், வேதாந்தப்பாடல் இவைகளைவிட, நாட்டுப்பற்றுப் பாடல், மகத்தான பலன் தந்தது. விழா கொண்டாடின அன்பர்கள், இந்தப் பகுதியைத்தான் விளக்கினார்கள் விஸ்தாரமாக. மதுரை முஸ்லீம் தோழர் ஒருவர் "பாரதியாரின் பாடல் ஆங்கிலரை ஓட்டிய அணுகுண்டு" என்று கூறினார். தமிழகத்திலே, காங்கிரசின் வெற்றிக்கு பாரதியார் பாடல், மிகமிகத் தாராளமாகப் பயன்பட்டது. பயன்படுத்திக்கொண்டு பாராளும் அளவு உயர்ந்த பலர், பாரதியாரை ஏதோ ஓர் சமயத்திலே மட்டும் எண்ணுவதுடன் இருந்தனர், இக்குறையைப் போக்கி, கவிஞரின் நினைவுக்குறியாக ஓர் அழகிய மண்டபத்தை, அமைத்தார் கல்கி.

ஆச்சாரியார் சொன்னாரே, பந்தல் மண்டபத்தை மறைக்கிறது என்று, அதுபோல, பாரதியாரின் தேசியப் பாடல்களைமட்டுமே, பரப்பிய காரணத்தால், நாட்டவருக்கு, பாரதியாரின் முழு உருவம் தெரியவில்லை-இனியாவது தெரியுமா, என்றால், தெரியச் செய்தாலொழியத் தெரிவதற்கில்லை என்று கூறலாம்.

* * *

ஆடுவமே பள்ளுப் பாடுவமே!
வந்தேமாதரம் என்போம்.
செந்தமிழ் நாடேனும் போதினிலே
தாயின் மணிக்கோடி பாரீர்,
ஜேய ஜேய பாரத

இப்படிப்பல தேசியப் பாடல்களை, நாட்டு மக்களின் செவிக்கும் சிந்தனைக்கும்கொண்டுவந்துள்ளனர். பாரதியார், அவ்வளவுதானா? அல்ல! பாரதியான் முழு உருவம் அது அல்ல! அடிமை நிலைபோகவேண்டும், என்ற கோபநிலையில் உள்ள பாரதி அது. ஆனால், அதைத் தாண்டி, நாட்டு உள் நிலை, மக்கள் மனநிலை, இவைகளைக் கண்டு, மனம் நொந்துவேதனைப்படும் பாரதி இருக்கிறார், மக்களின் மந்த மதியினைக் கண்டு அவர்களைத் திருத்தவேண்டும் என்றுஆவல்கொண்டு துடிக்கும் பாரதி இருக்கிறார், நாடு எப்படி எப்படி இருக்கவேண்டும், சமூகம் எவ்வண்ணம் அமைய வேண்டும், என்று இலட்சியம் கூறும் பாரதி இருக்கிறார். தேசிய பாரதியின் உருவம், இத்தனை பாரதிகளை மறைக்கிறது—ஆச்சாரியார், பந்தல், மண்டபத்தை மறைக்கிறது என்று கூறினாரே அதுபோல.

பெரிய பந்தல், விழாவுக்காக. மண்டபமோ, கவியின் பெருமைக்குரிய சின்னம். விழா முடிந்ததும், பந்தலைப் பிரித்து விடுவார்கள்-மண்டபம், நின்று அழகளிக்கும். அது போல் பாரதியாரின் 'தேசியக் கவிதை', அன்னியரை ஒட்டும் அரும்பணிக்காக மட்டுமே அமைவது—அந்தக்காரியம், முடிந்ததால், இனி,அந்தப்பந்தலுக்குஅவசியமில்லை, அவசியமில்லாததால், அது எடுபடும். அது எடுபட்ட பிறகுதான், பாரதியாரின் மனம், தெரியும். பாரதியாரின் முழு உருவமும் தெரிய, அவருடைய கவிதா சக்தியின்முழுப்பயனைப்பெற, அப்போது தான் முடியும்.

இனியும், மேடைகளிலே ஏறி, தாயின் மணிக்கொடி பாரீர் போன்ற, தேசபக்திப் பாடல்களை மட்டுமே பாடிப்பயனில்லை.

தாயின் மணிக்கொடி பார்க்கிறோம், இங்கே காயும் வயற்றையும் காண்பீர்—என்று மக்கள்—முழக்கமிடுவர். எனவே, எந்தப் பகுதியை மட்டுமே, அதிகமாகப் போற்றி, நாட்டுக்கு எடுத்துரைத்து வந்தார்களோ,அந்தத்தேசியப்பாடல்பகுதிக்குள்ள, பயனும், ஜொலிப்பும், இனி இராது. ஆகவே, பாரதி, பயன் இல்லையா? அல்ல, அல்ல! பயனுள்ள பகுதி, பலரறியா பாரதி, மறைக்கப்பட்ட பாரதி, இனித்தான் மக்களுக்குத் தெரியவேண்டும். தேசியக் கவிக்கு அப்பால், நிற்கிறார் அந்தப் பாரதி. அந்தப் பாரதி, ஆங்கிலேயனை, ஆரியபூமியிலிருந்து விரட்டும் பாரதிமட்டுமல்ல! நாட்டை விட்டுக் கேட்டினை எல்லாம் ஓட்டவேண்டுமென்று கூறும் பாரதி. மேடைகளிலே, இதுவரை, நிறுத்தப்படாத பாரதி! தேசபக்தர்களின் நாவிலே நின்று இதுவரை நர்த்தனமாடாத பாரதி! மறைந்திருக்கிறார், பொன்னாலான பெட்டிக்குள் முத்துமாலை இருப்பதுபோல. அந்தப் பாரதியை, நாம் அறிமுகப் படுத்தினால், விழா கொண்டாடியவர்களிலேயே பலருக்கு, முகமும் அகமும் சுருங்கக் கூடும். ஆனால் அந்த பாரதி,

நெடுநாட்களுக்கு மறைந்திருக்க முடியாது. வெளிவந்தாலோ, இன்று அவரை வந்திக்கும் பலரே, நிந்திக்கவும் கூடும். இதோ அந்த பாரதி—பந்தலால் மறைக்கப்பட்டுள்ள மண்டபம்.

பண்டைப் பெருமை - பழங்கால மகிமை—அந்த நாள் சிறப்பு—என்றெல்லாம், பேசுகிறீர்களே, அவர்களை நாம், எவ்வளவோ, கௌரவமாகத்தானே, கேட்கிறோம், ஐயா! பழய காலத்தைக் கட்டிப்பிடித்து முகிறீரே, இது சரியா? என்று.

பலருக்குத் தெரியாத, முழுப் பாரதி, அவர்களை, இலேசில் விடவில்லை! மூடரே! என்று அவர்களை விளிக்கிறார். கேட்கிறார் அவர்களை,

முன்பிருந்ததோர் காரணத்தாலே
மூடரே, பொய்யை மெய்யென
லாமோ?
முன்பெனச் சொலும் காலமதற்கு
மூடரே, ஓர்வரை துறையுண்டோ?
முன்பெனச் சொலின் நேற்றுமுன்
பேயாம்
மூன்றுகோடி வருடமு முன்பே
முன்பிருந்த தெண்ணிலாது புவி
மேல்
மொய்த்த மக்களெலா முனி
வோரோ?
நீர் பிறக்கு முன் பார்மிசை மூடர்
நேர்ந்ததில்லை என நினைந்தீரோ?
பார் பிறந்தது தொட்டின்று மட்டும்
பலபலப்பல பற்பல கோடி
கார்பிறக்கு மழைத்துளிபோலே
கண்ட மக்களனைவருள்ளேயும்
நீர் பிறப்பதன் முன்பு மடமை
நீசத்தன்மை இருந்தனவன்றோ?”

பழமை விரும்பி, என்ன எண்ணுவான், பாரதியாரைப்பற்றி!

“சென்றதினி மீளாது மூடரே, நீர்
எப்போதும் சென்றதையே சிந்தை
செய்து
கொன்றழிக்கும் கவலையெனும் குழி
யில் வீழ்ந்து
குமையாதீர் சென்றதனைக் குறித்தல்
வேண்டா
இன்று புதிதாய்ப் பிறந்தோம்
என்று நீவிர்
எண்ணமதைத் திண்ணமுற
இசைத்துக்கொண்டு
தின்றுவிளையாடி இன்புற்றிருந்து
வாழ்வீர்
தீமையெலாம் அகன்றுபோம்
திரும்பி வாரா.”

மற்றுமோர் சாட்டை! வெந்ததைத்தின்று, வாயில் வந்ததைப்பேசுபவர்களுக்கு, வகையாகத் தருகிறார் சாட்டை! சென்றது இனி மீளாது, மூடரே! மனுதர்மம்இருந்ததே!அரசுகளிலே ஆதிக்கம் இருந்ததே! நமது வலக்கரத்திலே அக்னி இருந்ததே! நம்மைக் கண்டதும், மற்றவர்களுக்கெல்லாம், பயபக்தி இருந்ததே! இவை எல்லாம் இன்று இல்லையே! மீண்டும் கிடைக்கப்பெறுவோமா என்றெல்லாம், எண்ணி எண்ணி ஏங்காதீர், சென்றது இனி மீளாது, என்று திட்டமாகக் கூறுகிறார். கூறுகிறேன் கேளுங்கள், மூடர்களே! என்று இடித்துரைத்துப் பேசுகிறார். இந்தப் பாரதி, மேடையிலே தோன்றுதபாரதி.

சேத்தபிறகு சிவலோகம்
வைகுண்டம்
சேர்ந்திடலாமேன்றேஎண்ணி
யிருப்பார் பித்தமனிதர்.

* * *

சாதிக் கொடுமைகள்
வேண்டாம் அன்பு
தன்னிற் செழித்திடும்வையம்:

* * *

“அரும்பும் வியர்வை உதிர்த்
துப்புவிமேல்
ஆயிரம் தொழில் செய்திடு
வீரே!
பெரும்புகழ் உமக்கே இசைக்
கின்றேன்
பிரமதேவன் கலையிங்கு நீரே”

* * *

பெண்ணுக்கு விடுதலை நீர்
இல்லை யென்றால்
பின்னிந்த உலகினிலே
வாழ்க்கை இல்லை.

தேசியக் கவிஞரால் மறைக்கப்பட்டுள்ள, புரட்சிக் கவிஞர் தெரிகிறார், இன்னும் தெளிவாக.

“நெஞ்சு பொறுக்குதிலையே
இந்த
நிலைகெட்ட மனிதரைநினைந்து
விட்டால்”

என்று சோகிக்கிறார் பாரதி! என் நிலைகெட்டுவிட்டது? தேசியக் கவியாகமட்டும் இருப்பின், பரங்கிபிடித்தாட்ட பாரதநாடு பரதவித்தது என்றுமட்டுமே கூறுவார். ஆனால், பலருக்குத்தெரியவிடாதபடி மறைக்கப்பட்டிருக்கும் முழுப்பாரதி பேசுவதைக்கேளுங்கள்.

“அஞ்சி அஞ்சிச்சாவார் இவர்
அஞ்சாத பொருள் இல்லை
அவனியிலே!
வஞ்சனைப் பேய்களேன்பார்
இந்த
மரத்திலேன்பார்—அந்தக்
குளத்திலேன்பார்.
துஞ்சுது முகட்டிலேன்பார்
மிகத்
துயர்ப்படுவார், எண்ணிப்
பயப்படுவார்!
மந்திரவாதி யேன்பார்—
சொன்ன
மாத்திரத்திலே மனக்கிலி
பிடிப்பார்
யந்திர சூனியங்கள்—
இன்னும்
எத்தனையாயிரம் இவர்
துயர்கள்

* * *

சாடுகிறார், சாடுகிறார். மூட நம்பிக்கைகளை!

* * *

கோஞ்சமோ பிரிவினைகள்?
ஒரு கோடி யேன்றால் அது
பெரிதாமோ?
ஐந்துதலைப்பாம்பேன்பான்
அப்பன்
ஆறுதலையேன்று மகன்
சோல்லிவிட்டால்
நேஞ்சுபிரிந்திடுவார்—பின்பு
நேடுநாள் இருவரும் பகைத்
திருப்பார்.

இங்ஙனம், சமுதாயத்திலே உள்ள கேடுகளை, மனதிலேஉள்ள தளைகளை, மூடக்கொள்கைகளைத் தாக்குகிறார், தமது கவிதா சக்தியைக்கொண்டு.

பாரதியாரா? என்று ஆச்சரியத்துடன் நாடு கேட்கும், அவர் சொன்னதத்தனையையும்சொல்லப்போனால். ஆனால், அந்தப் பாரதியாரை,அரும்பாடுபட்டு மறைத்திருக்கிறார்கள்.

பார்ப்பானை ஐயனேன்ற
காலமும் போச்சே

என்ற ஒருவரியைக்கூட அவர் சொன்னதாகச் சொல்ல, அஞ்சி மறைத்தனர்—அருந் தமிழ் நாட்டவர்தான்! பாரதியார் அந்தச் சமுதாயத்தை மேலும் என்னென்ன கூறி

ஞர் என்று தெரிந்தால்தானே, பாரதியாரின் முழுஉருவம் தெரியும்.

இந்நாளிலே பொய்ம்மைப்
பார்ப்பார்
அவர் ஏது செய்தும் காசு
பெறப்பார்ப்பார்
பிள்ளைக்குப் பூணூலா
மென்பான்
நம்மைப் பிச்சுப்பணம்
கோடேனத் தின்பான்
பேராசைக்காரனடா
பார்ப்பான்
ஆனால் பெரியதுரை என்னில்
உடல் வேர்ப்பான்
யாரானாலும் கொடுமை
செய்வான்,
பணம் அள்ளி இடவில்லை
யெனில் வைவான்

மகாகவி பாரதியின் வாக்கு, பேராசைக்காரனடா பார்ப்பான்! என்பது. மேடைகளிலே, கேட்டதுண்டா! பாரதி சிறப்புவிழாக்கூட்டங்களிலே, இந்தப்பாரதி தெரிந்தாரா? இல்லை! அவர், மறைந்திருக்கிறார், மண்டபம், பந்தலால்மறைக்கப்பட்டிருப்பதுபோல. விழா முடிந்தது பந்தலும் பிரிக்கப்பட்டது! மண்டபம் தெரிகிறது! என்பதுபோல, வெள்ளையர் வெளியேறும் விழா முடிந்தது, இனி, தேசியக்கவிதை அலங்காரத்தைக்கடந்து நிற்கும், பாரதி காணவிரும்பிய புது சமுதாயம்,

ஏழை என்றும் அடிமை
என்றும்
எவனுமில்லை, ஜாதியில்
இழிவுகொண்ட
மனிதரேன்போர் இந்தி
யாவில் இல்லையே!

என்ற இலட்சியம் ஈடேறிய நிலை பெற்ற சமுதாயம், மனிதர் உணவை மனிதர் பறிக்கும் வழக்கமில்லாத சமுதாயம், பழைமை மோகத்தில் படியாத சமுதாயம், காசியில் பேசுவதைக் காஞ்சியிலுள்ளோர் கேட்பதற்கான கருவி செய்யும் சமுதாயம், அத்தகைய புதிய சமுதாயத்தைக்காணவிரும்பிய பாரதி நிற்கிறார். ஆனால் அவரைப், பந்தல்மறைத்துக்கொண்டிருக்கிறது! அவரை, நாட்டுக்குத், தெரியவிடாதபடி செய்வதில் பலருக்கு இலாபம் இருக்கிறது. எனவே, தேசியக் கவிமட்டுமே தெரியவேண்டும் என்று எண்ணி ஏற்பாடுகள் செய்வர். ஆனால் அந்த எண்ணமும் ஈடேறுவதற்கில்லை. மக்களுக்குத் தெரிய ஒட்டாது அவர்கள் மறைத்துவைத்துள்ள பாரதியார், உண்மையில் மறைந்துவிடவில்லை. அதோ பாடுகிறார், கேளுங்கள்.

இருட்டறையில் உள்ளதடா
உலகம்
ஜாதி இருக்கின்றதேன்
பானும்........

அது பாரதிதாசன் குரல் அல்லவா? என்கிறீர்களா? ஆம்! பாரதிதாசன்தான்! அவர்தான், மணிமண்டபத்தைவிட விளக்கமாக, முழுப்பாரதியை, தமிழகத்துக்குத் தரும் அரும்பணியாற்றுகிறார். அவரிடம் நாங்கள், முழுப்பாரதியாரைக்காண்கிறோம், களிக்கிறோம் — வாழ்த்துகிறோம்.

அச்சம் தவிர்
ஆண்மை தவறேல்
உடலினை உறுதி செய்
எண்ணுவதுயர்வு
ஏறுபோல் நட
ஒற்றுமை வலிமையாம்
ஔடதம் குறை
கற்ற தொழுகு
காலமழியேல்
குன்றென நிமிர்ந்து நில்
கூடித்தொழில் செய்க
கைத்தொழில் போற்று
கொடுமையை எதிர்த்து நில்
சரித்திரத் தேர்ச்சிகொள்
சாவதற்கஞ்சேல்
சிதையா நெஞ்சுகொள்
சூரரைப் போற்று
சோதிடந்தனையிகழ்
தெய்வம் நீ என்றுணர்
தையலை உயர்வு செய்
தொன்மைக்கஞ்சேல்
நினைப்பது முடியும்
நூலினைப் பகுத்துணர்
நெற்றி சுருக்கிடேல்
பிணத்தினைப் போற்றேல்
புதியன விரும்பு
பேய்களுக்கஞ்சேல்
போர்த் தொழில் பழகு
முனையிலே முகத்துநில்
மேழி போற்று
யாரையும் மதித்துவாழ்

இவை பாரதியாரின் புதிய ஆத்திசூடி! புதியபாதை! பாரதிபாதை! தேசிய மணிமண்டபத்தோடுமுடிந்துவிடுவதல்ல, அதற்கும்அப்பாலுள்ள சமதர்மபுரிக்குப் போவதற்கு அமைந்த பாதை! அந்தப் பாரதி பாதையை அமைத்துக்கொண்டிருக்கும் அருப்பணியாற்றும் நாம் பாரதியார்பெற்றசிறப்புக்கண்டுபெருமையடைவதுடன், பாரதியாரின் முழுஉருவமும், மக்களுக்குத் தெரியச் செய்யும்காரியத்தையும் மேற்கொண்டுள்ளோம். பாரதி காட்டிய பாதையை நாடு நன்கு அறிய வேண்டும்! பரங்கியை ஓட்டி விடுவதுமட்டுமல்ல அது. நாட்டின் கேட்டுக்குக் காரணமாக உள்ளதனைத்தையும் ஓட்டி, புதியசமுக அமைப்பாக்கும் பாதை. அந்தப்பாரதிபாதையை, நாம் போற்றுகிறோம்.


# முத்தமிழ் நிலையம்

## புதிய வெளியீடுகள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| 1. தமிழர் யார்? | 0 | 8 |
| 2. ஆரியர்—தமிழர் கலப்பு | 0 | 8 |
| 3. தமிழ்: பழமையும் புதுமையும் | 0 | 8 |
| 4. தமிழர் சமயம் எது? | 0 | 8 |
| 5. மரணத்தின் பின்? | 0 | 8 |
| 6. பெண்ணே பெரியவள், ஏன்? | 0 | 8 |
| 7. சிந்துவெளித் தமிழர் | 0 | 8 |
| 8. ஆரிய வேதங்கள் | 0 | 10 |
| 9. பாம்பு வணக்கம் | | |
| 10. தமிழ் ஆராய்ச்சி | 0 | 6 |
| 11. சமணமும் சைவமும் | 0 | 8 |
| 12. உலகக்கலை உயர்வுக்கு உதவியவர் யார்? | 0 | 8 |
| 13. ஏ, தாழ்ந்த தமிழகமே (C. N. அண்ணாத்துரை, M. A.,) | 0 | 6 |
| 14. பெண்கள் உலகம் அன்றும் இன்றும் | 0 | 12 |
| 15. நடன சுந்தரி | 1 | 0 |
| 16. குமுதம் | 1 | 0 |
| 17. நாடகக்கலை மலர் (226 பக்கம்) | 2 | 0 |
| 18. தமிழர் சரித்திரம் | 3 | 0 |
| 19. இராவண காவியம் | 6 | 0 |
| 20. திருக்குறள்: தெய்வக் கொள்கை | 0 | 4 |
| 21. செய்யாத குற்றத்திற்கு ஜென்மதண்டனை | 2 | 0 |
| 22. தமிழரின் மறுமலர்ச்சி ( C. N. A. ) | 0 | 8 |

முத்தமிழ் நிலையம்,
75, வாதாமுத்தியப்பன்தெரு, சென்னை.

# ★ குறிப்புகள் ★

—❀—

பொது மக்களின் கட்டுப்பாடான கிளர்ச்சியும், அந்தக் கிளர்ச்சியை நடத்திச் செல்லும் தலைவர்களுக்கு, கஷ்ட நஷ்டம் ஏற்கும் துணிவும், அத்தகைய கிளர்ச்சியை ஆதரிக்கும் பண்புள்ள பத்திரிகைகளின் பலமும், ஒன்றுகூடினால், மமதை கொண்ட மன்னராட்சியின் மனப்போக்கையும் மாற்றிவிட முடியும், என்ற உண்மை மீண்டும் விளங்கும் வகையில், மைசூர் பொறுப்பாட்சிக் கிளர்ச்சி வெற்றிபெற்றது. உலக அரசியல் நடவடிக்கைகளையும் மக்களின் எழுச்சிக் காதைகளையும் நன்கறிந்த ஆற்காட்டு முதலியார், ஏனோ, கிளர்ச்சி முற்றுகிற வரையில் வாளாஇருந்தார். வீண் தொல்லை பொதுமக்களுக்கு. அவருக்கும் பழிபல.

மன்னராட்சி இனி முன்போலிருக்கமுடியாது என்பதுதெரிந்தவிஷயம். ஏன், அடக்குமுறை கொண்டு, சுயாட்சி வேட்கையைத் தடுக்கலாம் என்ற ஆசை கொள்ளவேண்டும்? ஏதோ, நடந்தது நடந்துவிட்டது என்று இப்போது, திவானும், சமஸ்தானக் காங்கிரஸ் தலைவரும் கூறிவிடுவர். ஆனால், இடையே, எவ்வளவு தொல்லைகள்!

மைசூர் மக்கள் பெற்ற வெற்றி கண்டு நாம் மகிழ்கிறோம்.

* * *

அந்தப் போராட்டத்திலே ஈடுபட்டவர்களைப் பாராட்டுகிறோம். திராவிடர் கழகத்தார், மைசூர் மக்களின் கிளர்ச்சியை ஆதரிக்கவில்லை என்றும், திவானாக, சர். இராமசாமி முதலியார் இருக்கும் காரணத்தால், பொறுப்பாட்சிக் கிளர்ச்சியையே கண்டித்தனர் என்றும், சிலர், மைசூர்சமஸ்தானத்திலும், இங்கும், கூறுவதாக அறிகிறோம். திராவிடர் கழகக் கோட்பாடுகளை ஆதரிக்கும் இதழ்களில் பல, மைசூர் மக்களின் பொறுப்பாட்சிக் கிளர்ச்சியை ஆதரித்தே எழுதின. திராவிடர் கழகம், மைசூர் போராட்டம் பற்றி அதிகார பூர்வமாக ஏதும் தீர்மானம் நிறைவேற்றவில்லை. எனவே திராவிடர் கழகம், சமஸ்தான மக்களின், சுயாட்சிக் கிளர்ச்சியை ஆதரிக்கவில்லை, மன்னருடன் குலவிற்று, திவானுடன் கொஞ்சிற்று என்றெல்லாம், பழிசுமத்துவது, தவறு என்று கூறுகிறோம். பொதுவாகவே, திராவிடர் கழகம், சமஸ்தானங்கள் சம்பந்தப்பட்ட பிரச்னைகளிலே தலையிடவில்லை. எனவே, மைசூர் விஷயமாகவும், ஏதும் தீர்மானம் நிறைவேற்றவில்லையேயொழிய, கழகம், முற்போக்குச் சக்திகளுக்கு ஆதரவாக இல்லை என்று பொருள்படாது. "திராவிடநாடு" மைசூர் மக்கள் போராட்டத்தைத் துவக்க முதலே ஆதரித்து வந்ததை, நேயர்களுக்குக் கவனப்படுத்துகிறோம். வெற்றி பெற்ற மைசூர் மக்கள் தங்கள் சமஸ்தானத்தில், சகலவகுப்பினருக்கும், திருப்தி தரத்தக்க, அரசியலை வகுத்து, உண்மைக்குடி அரசுக் கோட்பாட்டை மதித்து, புதுமணம் பெறவேண்டும்.

* * *

மைசூர் சம்பவத்தைக் கண்டும், ஹைதராபாத் போன்ற, சில சமஸ்தானங்கள், இன்னமும் பிடிவாதமாக, மக்களின் எழுச்சியை அடக்கும் அசட்டுக் காரியத்தைக் கைவிடாமலிருப்பது, கண்டனத்துக்கும், கேலிக்கும் உரியதாகும். உரிமைப்போர், ஓங்கியபடியும், பரவிய படியுந்தான் இருக்கும். அதைஒடுக்கும் வித்தையைக், குருவே செய்து பார்த்துத் தோற்றுவிட்ட பிறகு, குட்டிச் சீடர்கள், ஏன் முயற்சிக்க வேண்டும்? மனக்கசப்பு முற்று முன்னம், மதிவழி நடந்து, மணிமுடி தாங்கும் மதிப்பையாவது காப்பாற்றிக் கொள்ளவேண்டும்—மக்களை எதிர்த்துக்கொண்டு, மன்னர்கள் வாழ முடியாது.

* * *

இதை நன்கு தெரிந்து கொண்டுள்ள, காஷ்மீர் மன்னர், தமது கையிலே சிக்கியுள்ள பணம், நவரத்னம், பொன், இவைகளை எல்லாம் மூட்டையாகக் கட்டி வைத்துக் கொண்டு, வேகமாகச் செல்லக்கூடிய நூதன விமானத்தையும், தயாராக வைத்துக் கொண்டிருக்கிறாராம், பொதுமக்களின் கிளர்ச்சி, புயலென வீசத் தொடங்கினால், சீமை போய் விடுவது என்ற எண்ணத்துடன். காஷ்மீர மக்களின் தலைவராக விளங்கும் ஷேக் அப்துல்லா, சிறையினின்றும் வெளிவந்துவிட்டார். அவருடைய தலைமையில், விடுதலைப் போர் துவக்க, காஷ்மீரம் தயாராக இருக்கிறது.

* * *

ராஜபுதன மன்னர்கள், தந்திரசாலிகள். அவர்கள், வடநாட்டிலே ஏற்பட்டுள்ள, இந்து முஸ்லீம் பிணக்கைச் சாக்குக்காட்டித், தத்தமது சமஸ்தானங்களிலே, சுயாட்சிக் கிளர்ச்சிகளை நசுக்கி வருகிறார்கள். திடீரென்று ஒரு ராஜா, இந்து ரட்சகனாகிறான்! மற்றொரு ராஜா இஸ்லாமிய ரட்சகனாகிறான்! எல்லாம், வெளிவேஷம்!! பொதுமக்களை ஏய்த்துவிட, புதியதந்திரம். மக்கள் இதிலே கொஞ்சம் மயங்குகிறார்கள். மக்களை, இம்முறையிலே மயக்குவதுடன் இல்லை. இந்தியாவுடன் சேருகிறோம், என்று ஆசைகாட்டித் தமக்கு, பாதுகாப்பும், உதவியும் தேவை என்று, கேட்கின்றன—பெறுகின்றன. ஆக, வகுப்புக் கலகத்தைக் காட்டி, மக்களையும், மத்யசர்க்காரையும் ஏக காலத்தில் மயக்கிக் கொண்டிருக்கிறார்கள், மன்னர்கள். இந்த அல்லல் நிறைந்த வகுப்புக் கலவரம் இல்லாதிருந்தால், இதற்குள், இந்த ராஜபுதன சமஸ்தானங்களிலே, மக்கள், மேலும் ஒருபடி முன்னேறி, சுயாட்சி பெற்றிருப்பார்கள். இந்தக்குட்டி சமஸ்தானங்களால் ஏற்படும் விஷமம், எங்கே விபரீத நிலைமையை உண்டாக்கி விடுகிறதோ என்று அஞ்சக்கூடியபடி, ஜூனகாத் சமஸ்தானப் பிரச்னை வளருகிறது. இந்தநிலைமைகளை எல்லாம், வட்டமிடும் வல்லூறுபோல், பார்த்த வண்ணம் உள்ளன, வெளிநாட்டு வல்லரசுகள். உலக அரங்கிலே, அமெரிக்க, ரஷிய, மனத்தாங்கல் வளருகிறது. உலகமே, இரு கூடாரமாகி, விடுமோ என்று, ராஜதந்திரிகள் பயப்படக் கூடிய நிலைமை. இந்நிலையில், இந்தச் சமஸ்தானங்களின் பிரச்னை குழப்பத்தை ஊட்டுவது, வல்லரசுகளுக்கு, மிகத்திருப்தி தருகிறது.

* * *

மோப்பம் பிடிக்கும் போக்

(16-ம் பக்கத்தில்)

# திராவிட நாடு

காஞ்சி] 19—10—47 [ஞாயிறு


## மண்ணாசை

✲

"ஐயங்கார் ஸ்வாமிகளா! வரவேண்டும், வரவேண்டும்." என்றார் சாஸ்திரியார், முகமலர்ச்சியுடன். "பந்துலுகார், என்ன பேசப் போகிறாரோ,?" என்று, ஐயங்கார், சாஸ்திரியாரைக் கேட்டார், ஆவலுடன். "மகா பண்டிதாளெல்லாம் கூடியுள்ள இந்தச் சபையிலே அவர் தர்மோபதேசம் செய்யத்தானே வந்திருக்கிறார்" என்று சாஸ்திரியார் பொதுவாகப் பேசினார். பந்துலு, சாந்தி சொரூபராகக் காணப்படவில்லை!

"முகத்திலே கவனித்தீரோ, ரௌத்ராகாரத்தை?" என்று சாஸ்திரியார், கேள்வி ரூபத்திலே, நிலைமையை, ஐயங்கார் ஸ்வாமிகளுக்கு விளக்கினார். ஐயங்கார் மௌனமாக இருந்தார். பாவம், அவர் மனதிலே, என்னென்னமோ எண்ணம். இந்த 'ரௌத்ராகாரம்' இப்போது, பலனின்றிப் போகிறது. ஒரு காலம் இருந்ததல்லவா, அந்த ரௌத்ராகாரத்தின் முன்பு, அரசுகளெல்லாம், கிடுகிடுவென ஆடின காலம்! —அதை எண்ணி, ஆயாசமுற்றிருக்கக் கூடும், ஐயங்கார் ஸ்வாமிகள்.

பந்துலு, தமது தலைமைப் பிரசங்கத்தைத் துவக்கினார்.

* * *

பந்துலு, சாஸ்திரி, ஐயங்கார், போன்ற பிராமணர்கள் கூடிப் பேசுகிறார்கள் என்றால், மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை எனும் மாயப் பைசாசங்களை விரட்டி அடிக்கவேண்டும் எனும், மகத்தான உபதேசம் செய்கிறார்கள் போலும் என்று எண்ணிவிடாதீர்கள்.

மண்ணாசை மாநாடு அது. பாப்பு சோமசுந்தரம் பந்துலு என்பவர் தலைமையில், சென்னையில், சுபோதயம் எனும் மணிமண்டபத்தில், சென்றகிழமை நடைபெற்ற மாநாடு. சிகாகோல் நாகேஸ்வர சாஸ்திரி, பரமக்குடி கோபால ஐயங்கார், பர்லாகிமிடி சூரியநாராயண சாஸ்திரி, இப்படிப்பட்ட பிரம்மகுலத் தலைவர்கள் கூடினர் — உண்மையில்தான் உரைக்கிறேன்—மண்ணாசை மாநாடு நடத்தினர்.

அவர்கள் வேண்டுமானால், மறுப்பர்—மண்ணாசை மாநாடு அல்ல நாங்கள் கூட்டியது-நாங்கள் இனாம் தாரர் மாநாடு கூட்டினோம் என்பர். இரண்டுக்கும், சொல்லில் வித்யாசம் இருக்கிறது உண்மை. ஆனால் நோக்கம் என்ன? நோக்கத்தின்படி, பொருத்தமான பெயர் சூட்ட வேண்டுமல்லவா! அதற்காகவே, அந்த மகானுபாவர்கள் நடாத்திய அந்தக் கூட்டத்தை, மண்ணாசை மாநாடு என்றோம்.

### இனாம்தாரர்கள்!

வெட்கம், மானம், ரோஷமற்றவர்கள், 'இனாம்' கேட்டுப் பிழைப்பர்—பல்லை இளித்து! இவர்கள் அவ்விதமல்ல!! நெறித்த புருவத்தினர்! நீறுபூசிகள்! நாமதாரிகள்! ஜெபமாலை ஏந்திகள்! இவர்களின், மூதாதையர்களுக்கு அந்தக் காலத்திலே இருந்த மன்னர்கள், 'இனாம்' கொடுத்தார்கள்—ஏராளமான நிலங்களை. தேவதானம், பிரம்மதானம், சதுர்வேதி மங்கலம், என்ற பலப்பல பெயர்களுடன். ஏன்? தர்மத்தைத்தழைக்கச் செய்ய, தேவாலய காரியத்தைக் கவனிக்க, மதத்தை உத்தாரணம் செய்யும் மகானுபாவர்கள், என்று கருதி, இவர்களுக்கு, அந்த நாட்களிலே இருந்த, சிற்றரசன், அவனை அடுத்து வாழ்ந்த காட்டுராஜா, இப்படிப்பட்டவர்கள், ஏ ரா ள மா ன நிலங்களை 'இனாம்' தந்தனர். எனவே இவர்களுக்கு, இனாம்தாரர் என்று பெயர். இனாம்தாரர்களிடம் உள்ள நிலம், இப்போது ஏறத் தாழ 35 இலட்சம் ஏக்கர் இருக்கும்; அதாவது 35 இலட்சம் ஏக்கர் நிலம், பாடுபடாமல், நோகாமல், இனாம் தாரர்கள், எனும் உழைப்புறுஞ்சிகளிடம் உள்ளன—எவனோ, எந்தக் காலத்திலோ, எதற்காகவோ இவர்களுக்குத் தானமாகத் தந்த காரணத்தால்.

வாளை எடுத்துப் போரிட்டு, வந்தவனுடன் கூடிக்கொண்டு சொந்த நாட்டவனை வஞ்சித்து, ராஜாக்கள்—ஜெமீன்தாரர்கள்—ஏற்பட்டனர்.

ஜெபமாலை காட்டி, கங்காதீர்த்தம் கொடுத்து, மந்திரத்தை முணுமுணுத்து, ஆசி கூறி, ஆலயத்திற்கு அழைத்துச் சென்று,பெரும்பாலும், பிராமணர்கள், இனாம்தாரராயினர்!

இப்படி, வெட்டிக்கு, மக்களின் சொத்தை, மந்தபுத்தியுள்ள மன்னனின் தயவால் அபகரித்துக் கொண்டவர்கள், இந்த இனாம்தாரர்கள். 35 இலட்சம் ஏக்கர் நிலத்துக்கு மேல், இப்படிப்பட்ட வீணர்களிடம் சிக்கியிருக்க, முதுகெலும்பு முறியப் பாடுபடும், இலட்சக்கணக்கான உழவர்களுக்கு, தங்க நிழல் இல்லை!!

பிளாசி போன்ற பல களங்களிலே போரிட்டு இந்தப் பரந்த துணைக் கண்டத்தைப் பிடித்து, படைகூட்டி மிரட்டி, கொடிகட்டி ஆண்டுவந்த வெள்ளையர், வெளிஏறுகிறார்கள்! ஜெமீன், இனாம், என்ற, உழைப்புறுஞ்சும் உலுத்தர்கள், இனியும் தங்கியிருக்க முடியுமா! சமஸ்தானாதிபதிகளெல்லாம், பிடி தளர்ந்தாலும் பரவாயில்லை, பீடத்திலே அமர்ந்திருக்கவாகிலும் அனுமதி கிடைத்தால் போதும், என்று மன்றாடும் இந்த நாட்களில், இனாம்தாரர்கள், ஜெமீன்தாரர்கள், என்ற சிறு சர்வாதிகாரிகள், என்ன செய்ய முடியும்? கண் போன யானையும், கால் வளைந்த குதிரையும், ஒட்டி உலர்ந்து கிடக்கும் ஒட்டகமும், கிழிந்த முரசும், துருப்பிடித்த கத்தியும்,வளைந்த கேடயமும், மங்கிப்போன பொன்னிறப் பாகையும்—இன்னும் இவை போன்ற சின்னங்களாவது உண்டு, ஜெமீன்தாரர்களுக்கு. அவர்களிடம் உள்ள நிலத்தின் அளவு, 128 இலட்சம் ஏக்கருக்கு மேலிருக்குமாம். இந்த ஜெமீன்தாரர்களிடம், உள்ள நிலத்தைக் குடிநிலமாக்கச், சர்க்கார் சட்டம் செய்கிறது—ஜெமீன்தாரர்கள், கொஞ்சம் சலசலப்புக்காட்டிப் பார்த்தனர்—பலிக்கவில்லை-எனவே, வாய் மூடிக்கொண்டனர். அவர்களிலே சிலராவது,ஏதோ ஒருவகைப் போரில், வீரவிளையாட்டில், ஈடுபட்டிருக்கக்கூடும். இந்த இனாம்தாரர்கள், இளித்தவாய் மன்னர்களை ஏய்த்துப் பிழைத்துவந்த எத்தர் பரமபரை. இவர்கள் கூட்டினார்கள் மாநாடு! இனாம் நிலங்களைப் பறிக்க விடோம்!! ஜெமீன் நிலங்களைச் சர்க்கார், பறிக்கலாம், ஆனால் இனாம் நிலத்தைத்தொடக்கூடாது. ஜெமீன்தாரர்கள், பெரிய மன்னர்களுக்கு வரி வசூலிக்கும் அதிகாரிகளாக அமர்ந்தவர்கள்; நாங்கள் அப்படி அல்ல—நாங்கள் தர்மரட்சகர்கள்—எமக்கு இந்தப் பூமி தானமாகத்

தரப்பட்டது — இதைப் பறிப்பது மகா பாபம் — அதர்மம் — சட்ட விரோதம் — என்று, சீறிச் சீறிப் பேசினார்கள், சென்னையில். அதே போது, சட்டசபையிலே, ஜெமீன், இனாம், நிலங்களை, முறையே, ஜெமீன்தாரர், இனாம்தாரர் ஆகியோரிடமிருந்து பெற்று, சர்க்கார், நிர்வகிப்பது, எனும், திட்டம், தயாரில் இருக்கிறது — மொத்தத்திலே, இந்தத் திட்டத்தின்படி, 162 இலட்சம் ஏக்கர் நிலம், ஜெமீன், இனாம், எனும் தளைகளிலிருந்து விடுபடும். ஆசை காட்டியும், ஆளை மயக்கியும், அந்த நாளில் இவர்கள் பெற்ற நிலத்தைத் திருப்பித் தருவதற்குச், சர்க்கார், பணமும தருகிறார்கள் — நஷ்ட ஈடாக.

பத்துக்கோடி ரூபாய் நஷ்ட ஈடுத்தொகை! பாடுபடுபவனிடமிருந்து, சர்க்கார், பணத்தை, வரியாகக் கொண்டு, பாடுபடாத பரம்பரைக்கு, பத்துக்கோடி ரூபாயைக் கொட்டிக் கொடுக்கவும் இசைகிறது — முற்போக்குக் கொள்கையினரின், கண்டனங்களைக்கூடப் பொருட்படுத்தாமல். இந்தபத்துக்கோடி, கடைசித் தானம், 'பிணத்துக்கிடும் வாய்க்கரிசி' என்ற அளவில், கொடுத்துத் தொலைக்கட்டும், என்று ஓரளவுக்கு, மக்கள் சம்மதிக்கின்றனர். இனி நமதுஎதிர்ப்புப்பலிக்காது என்பதை அறிந்து ஜெமீன்தாரர்களும், அடங்கிக் கிடக்கின்றனர் — ஆனால் இந்த இனாம்தாரர்கள், மாநாடு நடத்துகிறார்கள் — மண்ணாசை கொண்டு.

இனாம்தாரர்களின் இரைச்சலை, அறிவுடையோர் பொருட்படுத்தக் கூடாது. ஆனால், இந்த நாட்டின் சமுதாய அமைப்பு முறையின் சீர்கேட்டின் காரணமாக, என்ன நேரிட்டிருக்கிறது என்றால், இனாம்தாரர் பிரச்னை, இன்றைய மந்திரி சபைக்கே நெருக்கடியைக் கொண்டு வந்திருக்கிறது. மந்திரிகள் மருள்கிறார்கள்! 'மாபெருந் தலைவர்கள்' என்ற விருதுபெற்றவர்கள், மௌன விரதம் கொள்கிறார்கள். 'இந்து' இனாம்தாரருக்கு வக்காலத்துப் பெற்று, எழுதுகிறது. எழுதுகிறதா? மிரட்டுகிறது, மந்திரி சபையை!

இப்படிப்பட்ட தீவிரமான திட்டங்களைக் கொண்டு வருவதால், மந்திரிக் கட்சிக்கு மகத்தான கஷ்ட நஷ்டம் ஏற்படும், என்று கூறுகிறது. தினசரி தவிர மற்றத் தமிழ் தேசியத் தாட்கள், இனாம்தாரர்களைத் தீண்டலாகாது என்று எச்சரிக்கை விடுகின்றன. மந்திரிகளில் பத்துப்பேர் — இனாம்தாரர் பக்கம்! முதலமைச்சரும், அங்ஙனமே! நெஞ்சில் உரமும் நேர்மைத்திறனும் கொண்ட வீரர் சிலர், சட்டசபைக் காங்கிரஸ்கட்சியிலே, இருக்கிற காரணத்தால் மட்டுமே, ஜெமீன்களோடு, இனாம்களையும் ஒழிக்கத்தான் வேண்டும் என்ற தீர்மானம், நிறைவேறிற்று, மிகப் பெரிய மெஜாரிட்டி கிடைக்கவில்லை. தீர்மானம் நிறைவேறியதும், "நான் ஓர் இந்து! இதைச்சகியேன்" என்று கூறி ராஜிநாமாச் செய்கிறார் ஓர் பார்ப்பனர். நான்கட்சிக்கட்டுப்பாட்டுக்கு அடங்கப்போவதில்லை, என்கிறார் மற்றோர் பார்ப்பனர். இனாம்தாரர்கள், பக்கம், பிரபல வக்கீல்களான, அல்லாடியும், வெங்கடராமசாஸ்திரியும், நிற்கிறார்கள். 'அகில இந்தியாவிலும்' கேட்கக்கூடிய விதத்திலே, ஆர்ப்பரிப்பு அதிகரித்துவிட்டது. முதலமைச்சர், டில்லிக்குச் செல்கிறாராம், மந்திராலோசனைக்கு.

பித்தாபுரம், பொப்பிலி, சிவகங்கை, சேத்தூர், வெங்கடகிரி, பானகல், உத்தமபாளையம், ஊத்துக்குழி, முதலிய ஜெமீன்தாரர்களால், கிளப்பமுடியாத அளவு கூச்சலை, இந்த இனாம்தாரர்களால், கிளப்ப முடிகிறது! எப்படி? இங்குதான், யார் எவ்வளவு தந்திரமாக மறைக்க விரும்பினாலும், ஆரியத்தின் விஷமம், பளிச்சௌத் தெரிகிறது. பரம்பரை பரம்பரையாக அனுபவித்து வரும்ஜெமீன்கள் பறிமுதலாவதைச் சரியென்று ஏற்றுக்கொண்டுவிட்ட இதழ்களெல்லாம், இனாம் சம்பந்தப்பட்டமட்டிலே இரைச்சலிடக் காரணம் என்ன? இனாம்தாரர்களில், பெரும்பாலோர், பார்ப்பனர் என்பதல்லவா! இது சரியாகுமா? ஆரியர், தங்கள் ஆதிக்கத்துககும் சுயநலத்துக்கும் துளி ஆட்டம் காண்கிறது என்றாலும், இப்படி ஒன்று கூடி, பெருங்குரல் கிளப்பி, மதம் போகுதே! பரம்பரை முறை போகுதே! என்று பேசிடுவர்.

மேனாட்டுச் சட்ட புத்தகங்களிலே படித்ததை எல்லாம்கொட்டிக்காட்டுகிறார் அல்லாடி! மேனாட்டிலே, இங்குள்ளதுபோல, ஒரு வகுப்பார், பூதேவர்கள் என்று உண்டா? அல்லாடி, அதைக்கூறமாட்டார். சட்டப் புத்தகங்களைச் சரமாரியாக வீசி, இனாம்தார்களைக் காப்பாற்றக் கிளம்புகிறார். இனாம்தாரர்களின் இந்தக் கூச்சலை, பிராமண சேவைக்கும் பக்திக்கும் வித்தியாசமறியாத முதலமைச்சர், வெளிப்படையாகவே ஆதரிக்கிறார். இது, அறிவுடைமை அல்ல என்பது மட்டுமல்ல, இது, கட்சியையும், தன் கூட்டு மந்திரித்தோழரையும் காட்டிக்கொடுக்கும் காரியமுமாகும். ஒரு காங்கிரஸ் மந்திரி, இனாம்தாரர்களை ஒழிக்கத்திட்டம்கொண்டு வரும்போது, மற்றக்காங்கிரஸ் மந்திரிகள், அதனை எதிர்க்கிறார்கள். ஏன் பணமூட்டைகளிடமும் பஜனைக்காரர்களிடமும் இவ்வளவு பற்றும் பயமும் இருக்கவேண்டும்? இப்படித், தொடை நடுங்கிக்கொண்டு, எத்தனை நாளைக் குத் துரைத்தனம் செய்வதாக உத்தேசம்? ஏன் இவ்விதமான துரைத்தனம்!

இனாம்தாரர்கள் பட்டியிலே, மடாதிபதிகளும், ஜீயர்களும், மற்றும், வேஷமிட்டு வேதாந்தம் பேசும் வெட்டிகளும், உள்ளன! இவர்களிடம் உள்ள 'இனாம்கள்' மதகாரியத்துக்காக, மன்னர்கள் மனமுவந்து தந்தனராம்! மதகாரியம்! எத்தகைய மதகைங்கரியம் நடைபெறுகிறது என்பதை, மடாலயங்களின் சுற்று வட்டாரத்திலே சென்று கேட்டாலேயே, விளங்குமே. பட்டணப் பிரவேசமும், பலவித தரிசனமும் தானே அங்கெல்லாம் மதக்கைங்கரியம். பசுபதிபாசம், வட்டில்! இனாம் நிலங்களை, ஏழைகளைக்கொண்டு உழவைத்துக் கொழுக்கும் 'சிவசொரூபங்கள்' பதியை விட்டுப் பசுக்களைப் பிரித்து, பணமெனும் பாசத்தால், தம்மிடம் பிணைத்துக்கொண்டு, சிவாகமம் படிப்பதாகக் கூறிவிட்டு, ஊரை ஏமாற்றும் விஷயம், யாருக்குத்தெரியாது. இவர்களுக்காக, ஓமந்தூரார் ஓலமிடுகிறார், அல்லாடி சல்லடம் கட்டுகிறார், சாஸ்திரியார் சட்டம்புரட்டுகிறார், தேசீயப்பத்திரிகைகள் ஆதரவு காட்டுகின்றன! ஏன் இந்தப்பரிவு? ஆயிரமாயிரம் மேடைகளிலே, வெள்ளையன் வெளி ஏறப்பட்டதும், உள்நாட்டிலே உள்ள சுறண்டல்காரர்களின் ஆதிக்கமும் ஒழிக்கப்பட்டே தீரும் என்று பேசியவீராப்பு ஏன்காற்றிலேபறக்க விடப்பட்டிருக்கிறது? சற்று, சட்டப் புத்தகங்களை மூடிவைத்து விட்டு, இனாம்தாரர்களின் வாழ்க்கையையும், அவர்களுக்கு உழைத்து அலுக்கும் பாட்டாளிகளின் அல்லலையும், பார்த்தால், அல்லாடிகள் இப்படித் துணிந்து பொதுமக்களுக்குத்துரோ

கம் செய்யமாட்டார்கள். மைலாப்பூருக்கும் மடாலயங்களுக்கும், ஏனோ இப்படி ஒரு தொடர்பு ஏற்பட்டுவிட்டது!! சுகபோகத்தையே சிவாகமமாகக் கொண்டுள்ள, தருமபுரம், திருவாவடுதுறை, திருப்பனந்தாள், மற்றும் இவைபோன்ற மடாலயங்களின் தயவு இல்லாமலே, சைவம் கூடத்தழைக்க முடியும்! மதத்தைக் காப்பாற்றுவதாகக்கூறிக் கொண்டு மந்தகாச வாழ்வு நடாத்தும், இவர்களின் போக்கு மக்களுக்கு நன்றாகத் தெரியும். இவர்களின் ஆதிக்கத்தைக் காப்பாற்றக் கிளம்புவது, பொது மக்களுக்கு மனதறிந்துசெய்யும் துரோகமாகும்.

கோயில்களுக்கு விடப்பட்ட இனாம்களிலே, கைவைப்பதா, என்று கலங்குகிறார், ஓமாந்தூரார். கோயில்களுக்கு ஏராளமான சொத்து இருக்கவேண்டுமென்று, எந்தத் தர்மசாஸ்திரம் தெரிவிக்கிறது? சைவமோ, வைணவமோ, ஜொலிக்க வேண்டுமானால், அந்த மதத்தைச் சாக்குக் காட்டி அமைக்கப்படும், மடாலயங்களுக்கு ஆயிரக்கணக்கான வேலி நிலங்கள் இருந்தாக வேண்டும் என்று, அவர் படித்த ருக்வேதம் கூறுகிறதா, அல்லது அடிக்கடி அவனாசியார் குறிப்பிடும் குறள் கூறுகிறதா!

'ராஜசேவை' செய்ததாகக்கூறி, ஜெமீன்தாரர்கள் கிளம்பினர்.

தேவசேவை செய்வதாகக் கூறிக்கொண்டு இனாம் தாரர்கள் கிளம்பினர்.

இருவரும், உழைத்தறியாத உலுத்தர் கூட்டமே! இதிலே இனாம்தாரர்களுக்கு ஒரு நியாயம், ஜெமீன்களுக்கு வேறு என்பதில்லை. இருவகையும், இந்த நாட்டை அரிக்கும் கேடுதான். எனவே, எக்காரணம் கொண்டோ, காங்கிரஸ் இனாம்தாரர்களுக்கு, விதிவிலக்கு அளிக்குமானால், பொதுமக்களின், கோபத்துக்கும், அறிவுடையோரின் கண்டனத்துக்கும் ஆளாவதோடு, பணக்காரர்களின் பாதந்தாங்கும் நிலையையும் அடைய நேரிடும். வேறுகட்சியினர் கூறினால், கண்டனம் என்று படும், எனவே, காங்கிரசிலுள்ள இளைஞர்களைக் கேட்டுக்கொள்கிறோம், உங்கள் கண்முன்பாகவே நடத்தப்படும் கபட நாடகத்தை உடனே கண்டித்துக், காங்கிரசின் பெயர்கூறி, உங்கள் உழைப்பின் பெயர்கூறி, தியாகத்தின் பெயர்கூறி ஆள வந்தார்களானவர்களை, நேர்வழி நடக்கச் சொல்லுங்கள், ஏழை உழவனை, நடைப்பிணமாக்கும் ஜெமீன் இனாம் முறைகள் ஒழிந்தாக வேண்டும்.

நாம் மட்டுமல்ல, காங்கிரஸ் சோஷியலிஸ்டு பத்திரிகையான ஜனதா,

“இனாம்களை ஒழிக்கத்தான் வேண்டும். கோயிலின் பெயரால் மதத்தின் பெயரால், கொள்ளையடிக்கும் கும்பலை ஒழிக்கத்தான் வேண்டும்.” என்று 12—10—47ல் எழுதுகிறது.

சட்டசபை அங்கத்தினர்களிடையே காணப்படும் சலசலப்பையும், வெளிவரும் வதந்திகளையும், கவனிக்கும் போது, இனாம் தாரர்களின் பக்கம், வெற்றி கிடைத்துவிடுமோ, என்று அஞ்சவேண்டி இருக்கிறது. ஏனெனில் முதலமைச்சரும் மற்றும் 10 மந்திரிகளும், இனாம் தாரர்பக்கம், நிற்கிறார்கள். மீண்டும் யோசிப்பது, திருத்தம் கொண்டுவருவது, மேலிடம்சென்று கேட்பது, என்று ஏதேனும் சாக்குக் கூறி, இனாம்தாரர்களின் கட்சியைத் தட்டிக்கொடுக்கக் காங்கிரஸ் சட்டசபைக் கட்சி, முற்படுமானால், அதைவிட, வெட்கக்கேடான, வெறுக்கத்தக்க நிலை வேறில்லை என்றாகும். உண்மையிலேயே ஓமாந்தூராருக்கும் அவருடைய சகாக்களுக்கும், மக்களின் நலனைவிட, மடாதிபதிகள், ஜீயர்கள் ஆகியோரின் நலனே முக்கியமென்று தோன்றினால், மனமார அதைக் கூறிவிட்டுப் பதவிகளை ராஜீநாமாச் செய்துவிட்டு, மடங்களிலே சென்று அமர்ந்து கொள்ளட்டும். மக்கள் மன்றத்தை, மக்களின் நலனில் அக்கறைகொண்ட மதிவாணர்கள், ஏற்று நடத்தட்டும். பொதுவாக, முற்போக்குக்கொள்கை கொண்டவர்களுக்கும், குறிப்பாகக் காங்கிரசிலே உள்ள முற்போக்குணர்ச்சியினருக்கும், இது ஓர், சோதனை. யாருக்காக ஆட்சிநடத்தப்படுகிறது? பொது மக்களுக்காகவா, அன்றி, ஜெமீன் இனாம், முதலியவர்களுக்காகவா, என்பது விளக்கமாகிவிடவேண்டிய நாள் விரைந்து வருகிறது. ஜெமீன்தாரர் விஷயத்திலே ஏற்படாத சிக்கலும், எதிர்ப்பும் இனாம்தாரர் பிரச்னையின் போது ஏற்பட்டிருப்பதைப் பார்க்கும் போதாவது, மற்ற நேரங்களிலே, வகுப்புவாதி, மதத்துவேஷி என்று தூற்றும், காங்கிரஸ் இளைஞர்கள் பெரியார் இராமசாமி கூறுவது சரியாகத்தான் இருக்கிறது, முற்போக்குக்கு முட்டுக்கட்டை போடுவதே ஆரியத்தின் வேலை. சாதாரண முதலாளித் தனத்தைவிட, மதத்துடன் பிணைக்கப்பட்டுள்ள முதலாளித்துவம், அதிகத் தொல்லை தரக்கூடியது — என்று அவர் அடிக்கடிகூறி வருவதன் உண்மை ஓரளவு தெரிகிறது, என்று சொல்லக்கூடும் என நம்புகிறோம். ஜெமீன் முறை போலவே, இனாம் முறையும் ஒழிக்கப்படத்தான் வேண்டும் என்பதைத் தெளிவாக, மக்கள், துரைத்தனத்தாருக்குத் தெரிவிக்க வேண்டும். மண்ணாசை கொண்ட மமதையாளர்களின் காலம் மலையேறிவிடவேண்டும். மக்களின் உழைப்பை உறிஞ்சும் முறை அழிந்தாக வேண்டும். அதுதான், விடுதலையின் பயன்! அதுதான் இளைஞர் குறிக்கோள்.

*

## எது தமிழ்நாடு

தமிழ்நாடு என்பது எந்த நாடென்று நிர்ணயிப்பதற்கு ஆராய்ச்சி வேண்டியதில்லை. சென்னை நகரிலிருந்து குமரி வரையில் மலையாளத்திற்குக் கிழக்கே உள்ள நாடே தற்காலத்தில் தமிழ் நாடென்று சந்தேகத்திற்கிடமில்லாமல் கூறலாம்.

வேலூரில் நடைபெற்ற சென்னை மாநிலத் தமிழர் மாநாட்டுத் தலைவர்

**செல்வம்**

28—12—38

## ஏஜண்டுத் தோழர்களுக்கு

ஏஜண்டுத் தோழர்கள் பலர், தங்களுக்குத்தேவைப்படும் காப்பிகளின் எண்ணிக்கையைக் குறித்து எமக்கு எழுதப்படும் கடிதங்கள், தாமதமாய் வருவதால், அவர்களின் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாமல் போகிறது. எனவே அவர்கள், தங்களுக்குத் தேவைப்படும் காப்பிகள் எவ்வளவு என்பதைப் பிரதி வாரமும் புதன் கிழமைக்குள்ளாக எமக்குக் கிடைக்கும்படி எழுதக் கேட்டுக்கொள்கிறோம். பிரதி வாரத்திலும் அதிக காப்பிகள் அனுப்பவேண்டும் என்று எழுதும் தோழர்கள், இதை முக்கியமாகக் கவனிக்க வேண்டுகிறோம்.

**மானேஜர்**

அவனுசியார்

# காணவேண்டிய காட்சி

★

இடம்:—தமிழாசிரியர் வகுப்பு.

காலம்:—பிற்பகல்.

நிலைமை:-தமிழாசிரியர், புதுப் பாடம் கற்றுக் கொடுத்தான பிறகு, களைத்து, இரண்டோர் நிமிஷம், மௌனமாக இருக்கிறார்.

உடனே, மாணவர்கள் பேசத் துவங்கிவிடவே, வகுப்பிலே இரைச்சலாகி விடுகிறது. இந்த இரைச்சலைக் கேட்டு, கோபம் கொள்கிறார் தமிழாசிரியர். மேற்கொண்டு பாடம் நடத்த விரும்பவில்லை. எனவே, பழய பாடங்களிலிருந்து, கேள்விகள் கேட்கலானார்.]

த. ஆ. "லோகங்கள் எத்தனை சொல்லு! டே! சுப்பு உன்னைத் தாண்டா, மண்டு"

மா. "வெள்ளி, பித்தளை, செம்பு..............."

த. ஆ. "தலை தலையென்று அடித்துக் கொண்டு எங்காவது தேசாந்திரம் போய்விடலாம் போல இருக்கிறது, இந்தச் சனியன்களோடு மாரடித்துக் கொண்டிருப்பதை விட. ஏண்டா, சுப்பு உன்னை நான், லோகங்கள் எத்தனை என்று கேள்வி கேட்டேண்டா, உலோகங்களை அல்ல"

மா. "நான், உலோகங்களைத்தான் கேட்கிறீர் என்று எண்ணிக்கொண்டேன்."

த. ஆ. "சரி, சொல்லு எத்தனை லோகங்கள்"

மா. "கீழ் ஏழு, மேல் ஏழு, ஆக பதினாலு. அதல, சுதல, விதல, தரா தல..................."

த.ஆ. "சரி, உட்கார். "டே! பரந்தாமன் பள்ளி கொண்டிருக்கும் கடலின் பெயர் என்ன? உன்னைத் தாண்டா, உன்மத்தம்!"

மா. "திருப்பாற் கடல்"

(பள்ளிக்கூட மணி ஓசை கேட்கிறது)

(பல மாணவர்கள்)

மா. "சார்! சார்! மணி அடித்து விட்டது."

த. ஆ. "இங்கே யாருக்கும் காது செவிடில்லை. தெரியும் மணி அடித்தது. நாளைக்கு, நள வெண்பா, கவனமிருக்கிறதா?"

மா. "இருக்கு சார்!"

தா. ஆ. "டே! அன்னத்தைத் தூதுவிட்டபகுதி, நாளையப்பாடம்"

(தமிழாசிரியர் போகிறார்)

(உடனே வகுப்பிலே, ஒரே கூச்சல். பிள்ளைகள் விளையாடுவதால்)

ஒரு மாணவன்!—டே! அன்னம், பேசுமாடா?

மற்றோர் மாணவன்:—போடா, அன்னம் எப்படிப் பேசும்? சும்மா, கதைதானே.

வேறு மாணவன்:—புளுகு.

ஒரு மாணவன்—அது சரி, ஏன் இப்படி பொய்யையும் புளுகையும் படிக்கச் சொல்லி, உயிரை வாங்குகிறார், வாத்தியார்.

வேறு மாணவன்:—அவர், என்னடா செய்வார்? புத்தகத்திலே இருப்பதைத்தானே சொல்லிக் கொடுக்க முடியும்.

ஒரு மாணவன்:—இவரைப்போல, ஒரு வாத்தியார்தானே, அந்த புத்தகமும் எழுதினார்?

மற்றோர் மாணவன்:—ஆமாம்.

வேறு மாணவன்:—ஏன், அவர் புளுகினார். ஏன் இப்படி இவர்களெல்லாம், புளுகு மூட்டை வியாபாரமே செய்கிறார்களோ, தெரியவில்லை.

(சில மாணவர்கள்)

டே! வாத்தியார்! வாத்தியார்!

(வகுப்பு நோக்கி ஒரு ஆசிரியர் வருகிறார்)

(ஆசிரியர் அமர்ந்ததும்)

ஆசிரியர்:— டே! கேள்வி நேரம் முதலில்—பிறகு புதுபாடம். மூடுங்கள் புத்தகத்தை. டே! கண்டம், எத்தனை?

ஒரு மாணவன்:—அதல, சுதல, தரா...............

[ஆசிரியர் கோபமாக எழுந்து சென்று, மாணவன் கன்னத்தில் அறைந்து விட்டு]

குரங்கே! திமிரு! வாலையாட்டுகிறே, என்னிடமா,

(மாணவன் அழவில்லை குறும்புப் பார்வை பார்க்கிறான். ஆசிரியருக்குக் கோபம் அதிகமாகி மாணவன் தலையிலே குட்டிக்கொண்டே பேசுகிறார்)

அதல, சுதல, தராதல, மடையா....

மாணவன்:—சார்! நான், இது பூகோள வகுப்பு என்கிற கவனமில்லாமல், பேசிவிட்டேன்.

ஆசிரியர்:—வாலை ஒட்ட நறுக்கி விடுவேன், ஜாக்ரதை.

மாணவன்:—நான், வேண்டுமென்று, சொல்லவில்லை, சார். தமிழ் கிளாசிலே, லோகம் எத்தனைன்னு கேட்டா,

ஆசிரியர்:—அங்கே, சொல்லித் தொலை, உன் அதல சுதலத்தை........ அபத்தத்தை........இங்கே........

மாணவன்:— இங்கே, அட்லாசிலே, இருக்கிற படங்களைப் பார்த்துத்தான் சொல்லவேணும்.

ஆசிரியர்:—பூகோள கிளாசிலே, ஆப்பிரிக்கா, அமெரிக்கா, ஆசியா, ........இப்படித்தான் பேர்களே தவிற, அதல, சுதல, தராதல, இதெல்லாம் கிடையாது.

ஒரு மாணவன்:— நாங்க, சிறு பசங்கதானே சார், ஏன், எங்களுக்கு, இப்படி, "இரண்டு இரண்டா" சொல்லிக் கொடுத்து, கெடுக்கிறாங்க.

(ஆசிரியர், கோபத்தையும் மறந்து சிரிக்கிறார்.)

(மாணவனும், அடிபட்டதையும் மறந்து சிரிக்கிறான்.)

மாணவன்:—சார்! தமிழ் வாத்தியார், பாற்கடல் இருக்கிறதுன்னு சொல்கிறார். நீங்களோ, பசிபிக்கடல் இருக்கிறது என்று சொல்கிறீர்கள்.

ஆசிரியர்:-ஆமாம், அதற்கென்ன செய்வது! தமிழ் வாத்தியார், பத்துத் தலை ராவணன் கதைகூடச் சொல்லுவார். அதெல்லாம், நிஜமாகுமா?

மாணவன்:— ஏன் சார், தமிழ் வாத்தியார் இப்படிப் புளுகு பேசுறார்?

ஆசிரியர்:—(சிரித்துக்கொண்டே) போடா, அவரா, பொய் பேசுகிறவர்? புத்தகத்திலே, அப்படி எழுதி இருக்கு............

மாணவன்:—நாங்க, ஒரு எழுத்து பிழையா எழுதிவிட்டாக்கூட, தலையிலே குட்டி, பென்ச்சிமேலே, ஏறி நிற்கச் சொல்கிறீர்........

ஆசிரியர்:—சரி! சரி! உட்கார்.

மாணவன்:—ஏன் சார், பத்து

தலை ராவணன், பாற்கடல், பாதாள லோகம், இதெல்லாம், பொய்தானே.

ஆசிரியர்:—ஆமாம். ஆனால் நாங்களெல்லாம், இனிமேல் உங்களிடம் இப்படி எல்லாம் பேசக்கூடாது.

மாணவன்:-ஏன் சார்!

ஆசிரியர்:—சர்க்கார் உத்திரவு.

மாணவன்:-பொய் புரட்டு, எதையும், விளக்காமல் பாடமாகச் சொல்லிவைக்கவேண்டும் என்று....

ஆசிரியர்:-உட்கார்டா! உனக்கு விளங்காது.

மாணவன்:-சார்; சார், விளங்குகிறமாதிரியாச் சொல்லுங்க, சார்.

ஆசிரியர்:-பழயகதை, புராணம், இதிகாசம், இதெல்லாம் இருக்கே, அவைகளிலே நிறையப் பொய்யும் புரட்டும் நிறம்பி இருக்கு .... ஆனா அதை விளக்கிச் சொன்னா, மதத்தைக் கேலி செய்வதாகவும், குறைவாகப் பேசுவதாகவும், ஆகிவிடும். ஆகையாலே, இனி வாத்தியார்கள் இப்படியெல்லாம், பேசக் கூடாது, பேசினால் "டிஸ்மிஸ்" என்று மந்திரி உத்திரவிட்டிருக்கிறார்.

மாணவன்:-போங்க சார்! இப்படி உத்திரவு போடுகிற மந்திரி, டிராமாவிலே கூட இருக்கமாட்டாங்க.

ஆசிரியர்:-நிஜமாத்தாண்டா. மந்திரி அவனாசிலிங்கம்னு, இருக்கிறார் அவர் போட்டிருக்கிறார் இந்த உத்திரவு.

மாணவன்:—அன்யாயம்! அப்ப, எங்க மனதிலே, பொய்யைப்போட்டு நிறப்பி அனுப்பவேண்டும்னு சர்க்கார் எண்ணுகிறதுன்னுதான் அர்த்தம்.

ஆசிரியர்:—கேள்வி கேட்கிறதும், பதில் சொல்கிறதுமாக இருந்தா புராண விஷயமான நம்பிக்கை கெட்டுவிடும், மதவிஷயமான நம்பிக்கை கெட்டுவிடும்னு, சர்க்கார் எண்ணுகிறது.

வேறு மாணவன்:—எங்கள் அம்மா கூடத்தான், அப்படியே எண்ணுகிறாங்க.

ஆசிரியர்:—உன் அம்மாவா?

மாணவன்:—ஆமாம் சார்! எப்போதாவது, காலையிலே செய்த குழம்பை ஊற்று வாங்க—நான் 'மோந்து' பார்ப்பது வழக்கம். ச்சீ! கழுதே! ஏன் மோந்து பார்க்கறே, பேசாமே, தின்னு என்பாங்க.

ஆசிரியர்:—ஏன்?

மாணவன்:—குழம்பு ஊசிபோயிருக்கும். மோந்துபார்த்தா, தெரிந்துவிடும்........அதனாலேதான், மோந்து பார்க்காதே, என்ற உத்திரவு.

(ஆசிரியரும் மணவர்களும் சிரிக்கிறார்கள்)

மாணவன்:- அம்மாவுடைய அதிகாரத்துக்குப் பயந்து, சாப்பிட்டுவிட்டா, பிறகு, குமட்டல் எடுத்து, வாந்தி, வரும், எனக்கு.

ஆசிரியர்:- ஆமாம், கெட்டுப் போனதைத் தின்றால், வாந்திதான் ஆகும்—உள்ளே, தங்காது—ஜீரணமாகாது.

மாணவன்:- ஆமாம்சார்! அதே போலத்தான் பொய்யும் புரட்டுமாக இருக்கிற பழயசரக்குகளை எல்லாம் பயங்காட்டிக் காட்டி எங்க மனசிலே புகுத்தினாக்கூட, அதெல்லாம், ஜீரணமாகுமா, வாந்தியாகிவிடும்.

(மறுபடியும் வகுப்பிலே சிரிப்பு)

ஆசிரியர்:- அப்படியானா, மந்திரி அவினாசிலிங்கமும் உங்க அம்மாவும், ஒரே விதந்தான்.

மாணவன்:- அது எப்படி, சார், இரண்டு பேரும் ஒண்ணு. எங்கஅம்மாவுக்கு, மாசாமாசம் ஆயிரம்ரூபா சம்பளமா வருது?

(மீண்டும் சிரிப்பு)

வேறு மாணவன்:- டே! எங்க அம்மா, எங்க அம்மான்னு சொல்கிறயே, நிஜமாகவா....?

மாணவன்:- எங்க அம்மான்னா. சொந்த அம்மா, இல்லே, எங்க அப்பாவுக்கு இப்பவந்தவங்க — இரண்டாந்தாரம்.

(மீண்டும் சிரிப்பு)

[ஆசிரியர், மேனஜயைத் தட்டுகிறார். வகுப்பிலே அமைதி ஏற்படுகிறது. பாடத்தைத்துவக்குகிறார்]

கங்கை பிரம்மபுத்ரா, சிந்து, முதலிய ஜீவநதிகள், இமயமலையிலிருந்து உற்பத்தியாகி...............

[அவர் பாடம் சொல்லிக் கொண்டிருக்கும் போது மாணவர்கள் செவியில், ஏற்கனவே தமிழாசிரியர் சொன்னபாடம் ஒலிக்கிறது ]

இமயமலையிலே, பரமசிவனானவர், பக்கத்திலே பார்வதிதேவி நின்று கொண்டிருக்க, ஜடாமுடியிலே, கங்காதேவி இருக்க எதிரே ஆறுமுகனும், விநாயகனும், விளையாடுவதைக் கண்டு............

[வகுப்பு நடந்துகொண்டிருக்கிறது]

★

## வடநாட்டு ஆதிக்கம்

வடநாட்டுக்கு, ஆதிக்கம் அதிகரித்துவருகிறது, பலதுறைகளிலும், என்பதை நாம், பன்முறை எடுத்துக் காட்டி வருகிறோம்.

ஆலை அரசர்களாய், வாணிபக் கோமான்களாய், தொழில் துறை விற்பன்னராய், வடநாட்டவர், மேலோங்கி, பணஅரசு அமைத்துள்ளனர், இதன் பயனாகத் திராவிடம் தேய்கிறது என்பதை எடுத்துக் காட்டி வருகிறோம்.

இது, வீண் பிரசாரம் என்றும், கற்பனைக் கவலை என்றும் காங்கிரசிலுள்ள, திராவிட நண்பர்கள் கருதுகிறார்கள்.

"பணத்தோட்டம்" என்ற தலைப்பிலே, முன்போர் முறை, வடநாட்டார், பாங்கிகள்மூலம் எவ்வளவு ஆதிக்கம் செலுத்துகிறார்கள் என்பதை விளக்கினோம். எந்தத்தொழிலுக்கும்,இந்தப் பணத்தோட்டத்தின் உதவி தேவை. இதனை வடநாட்டவர், எப்படிப்பயன் படுத்துகிறார்கள் என்பதை, திராவிடர் கழகத்து ஏடல்ல, வெறும் வாணிப விவகாரத்தை விளக்கும் 'வியாபாரி' என்ற ஏடு, விளக்கியிருக்கிறது. அந்தக்கட்டுரையை இங்கு வெளியிடுகிறோம், வடநாட்டு ஆதிக்கம் எவ்வளவு தூரம் வளர்ந்திருக்கிறதுஎன்பதைத் தெரிந்துகொள்ள வேண்டுகிறோம்.

பொருளாதாரத் துரையிலே இப்படி அமோகமான ஆதிக்கம் வடநாட்டுக்கு இருக்கும்போது, திராவிடநாடு, சுயாட்சியினால் என்ன பலன் பெறமுடியும் என்பதுபற்றிச் சிந்திக்கும்படி காங்கிரஸ் திராவிடர்களைக்கேட்டுக்கொள்கிறோம்.

"செப்டம்பர் 20-ம் தேதி ரிசர்வ் பாங்க் ஒரு முக்ய பிரகடனத்தை வெளியிட்டது. அதாவதுஎந்தபாங்க் ஆட்டத்தில்இருக்கிறதோ,அந்தபாங்கிற்குத் தகுந்த செக்யூரிட்டியின் பேரில் எவ்வளவு கடன் வேண்டுமானாலும் ரிசர்வ் பாங்க் கொடுத்து உதவும். அதற்காக ரிசர்வ் பாங்க் ஆக்டில் செக்ஷன் 17-ம் 18-ம் ஒரு விசேஷ சட்டத்தால் திருத்தி யிருக்கிறார்கள். இந்திய சட்டசபை கூடி அந்தச் சட்டத்தைத் திருத்துவதற்கில்லாமல், இந்த விசேஷ சட்டம் திடீரென ஏன் ரிசர்வ் பாங்கிற்கு

(16-ம் பக்கம் பார்க்க)

# ★ இனம்தாரர் ★

## ஒரு படப்பிடிப்பு

*ஜெமீன்களைப் பற்றி மக்கள் அறிந்துள்ள அளவுக்கு இனம்தாரர்களைப்பற்றிச் சரியாக அறிந்து கொள்ளவில்லை, இனம்தாரர்களின் கீழ் வேலை செய்யும் குடிமக்கள் படும் கஷ்டங்களைத் தெரிந்து கொள்ளவும், இனம்தாரர் ஒழிப்பு மசோதாவை நிறைவேற்றித் தீரவேண்டுமென்பதன் அவசியத்தை உணரவும், தஞ்சாவூர் வட்டம்,பட்டுக்கோட்டைத் தாலுக்கா வடசேரிக்கிராம முன்னேற்றச் சங்கத்தார் வெளியிட்டுள்ள அறிக்கை பயன் படுமென்று கருதி அதனை இங்கு வெளியிட்டிருக்கிறோம்.*

"1. நாங்கள், பட்டுக்கோட்டை தாலூகா இனம் 77 நெ. வடசேரி கிராமத்திய அமானி பட்டாதார்களும், கிராம வாசிகளுமானவர்கள்.

2. T. D நெ. 581ன்படி தஞ்சாவூர் மகாராஜா துளாபோஜி அவர்களால் 1772ஹும் எழுதிவைத்த ஷரத்துப்படி எங்கள் கிராமமாகிய வடசேரி, ராமேஸ்வரம் சத்திரத்துக்கு மேல்வார பாத்தியமுடையது. இது தஞ்சை மாவட்டக் கழக மேற்பார்வைக்குட்பட்டது.

3. இதிலுள்ள பரம்பரை ரயத்துகள் சத்திரத்துக்கு அமானி பட்டாதார்கள்.

4. இந்த பட்டாதாரிகள் ஜில்லா போர்டார் அப்போதைக்கப்போது குறிப்பிடும் கால அளவிற்கு அவர்கள் குறிப்பிடும் நிபந்தனைக்குட்பட்டு பட்டா முச்சலிக்கை எழுதிக்கொடுத்து நிலங்களை சாகுபடி செய்து வருகிறார்கள்.

5. அப்படி எழுதிக் கொடுக்கும் பட்டா முச்சலிக்கையின் ஷரத்துக்களை கவனிக்கும் அறிவாளிகள், இந்த இனம் கிராமத்தில் வாழும் ரயத்துக்களின் நிலைமையைக் கண்டு மனம் கலங்கி, வருந்தாது இருக்கமாட்டார்கள். இக்கிராமத்தின் தீர்வையோ படிப்படியாக அதிகரித்து வந்து தற்கால ரேட்டு ரயத்துகள் தாங்க முடியாத பளுவாகி, ரயத்துகள் இப்பளுவின் கீழ் நாளுக்கு நாள் நசித்துக்கொண்டு வருகிறார்கள்.

6. உதாரணமாக:—

முன் கால ரேட்டு

| | | |
|---|---|---|
| வேலி 1க்கு | ரூ | 5—0—0 |
| 1908-க்குப் பின் | ,, | 7—8—0 |
| 1926-க்குப் பின் | ,, | 17—8—0 |
| 1946-லிருந்து | ,, | 20-12—0 |

இது தவிர, மானியம், சுதந்தரம் வகையராவில் ரயத்துகள் பிரத்தியேகமாக செலுத்தவேண்டியது 100 கலத்திற்கு $4\frac{1}{8}$ கலம். இத்துடன் காவல்வரி, ரோட்டு வரி, கல்வி வரி முதலியவைகளும் ரயத்துகளே செலுத்தவேண்டும். இத்துடன் சர்க்கார் தண்ணீர் தீர்வை ஏக்கர் 1-க்கு ரூ. 5—10—0 ஆக வேலிக்கு ரூ. 37—8—0 செலுத்தவேண்டும். ஆனால் அக்கம் பக்கத்து ரேட்டுகள் ஏக்கர் 1க்கு 0—8—0 முதல் 1—8—0 வரை நிலத் தீர்வையாயிருக்கிறது.

7. இந்த இனம் எஸ்டேட்டு ராமேஸ்வரத்திலுள்ள பூந்தோட்டம், தண்ணீர் பந்தல் செலவிற்காகஏற்பட்டது. ஒருதண்ணீர் பந்தல் செலவிற்காக வருஷம் 1க்கு ரூ. 8640—0—0 இக்கிராமத்தில் வசூலிக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. இதை இனம் எஸ்டேட்டு நிலைத்திருக்க வேண்டுமென்று வாதாடும் சட்டசபை அங்கத்தினர்கள் கவனிக்க வேண்டிய விஷயம். உதாரணமாக இக்கிராமத்திலிருக்கும் சத்திரத்திலுள்ள தண்ணீர் பந்தல் நடத்துவதற்காக ஏற்பட்டிருக்கும் 2 வேலி நிலத்தில் வசூலாகும் ரூ. 75—0—0ல் தண்ணீர் பந்தல் செலவு ரூ. 10—0—0-க்குள்தான் நடக்கிறது. இக்கிராமத்திலுள்ள புறம்போக்கு நிலங்களை இனம்தாரரே ரொக்க விலையாக ரயத்துகளுக்கு ஏல விற்பனையில் விடுகிறார்கள்.

| | | |
|---|---|---|
| முதலில் செண்டு 1க்கு | ரூ | 0—1—0 |
| பிறகு செண்டு 1க்கு | ,, | 0—3—0 |
| பிறகு செண்டு 1க்கு | ,, | 0—8—0 |
| தற்காலம் செண்டு 1க்கு | ,, | 1—0—0 |

வீதம் விற்றிருக்கிறார்கள். இப்படி போட்டியில் விற்பதால், தற்காலம் இக்கிராமத்தில் மேய்ச்சல் தரை, முதலிய சமுதாய புறம்போக்குகள் இல்லாது ரயத்துகள் கால் நடைகளைக் காப்பாற்றுவதற்கும், கிராமச் சிறுவர்களும் பள்ளி மாணவர்களும் விளையாடுவதற்கு பொதுஇடம் இல்லாது தவிப்பதையும், நடைபாதைகள் வசதிக் குறைவையும் இழந்து தவிப்பதையும், கல்வி முதலிய இதர டிபார்ட்டுமெண்டுகள் மூலம் அறியக் கிடக்கும் உண்மையாகும்.

8. ஆகையால் பாமர மக்களாகிய கிராமவாசிகளின் நம்பிக்கைக்குத் துரோகம் செய்து, இனம் மடம் முதலிய எஸ்டேட்டுக் குடிகள் நலனைப் புறக்கணித்து, எஸ்டேட்டுகள் நிலைத்திருக்க வேண்டுமென்று மறைமுகமாகவும், நேர்முகமாகவும் பாடுபடும் பிரமுகர்களும் சட்டசபை அங்கத்தினர்களும் இந்த இனம் கிராமத்தின் உண்மை நிலையை நேரில் கண்டால், ஜமீன்தாரி குடிகளைவிட இனம் எஸ்டேட்டுக் குடிகள் தருமத்தின் பேரால் வதை செய்யப்படுவதை நன்கு உணர்வார்கள்.

9. இனம் எஸ்டேட்டில் தருமத்தின் பேராலும், மதத்தின் பேராலும் நசுக்கப்பட்டு வாடி வதங்கும் குடி மக்களுக்காகப் பாடுபட்டு இனம் எஸ்டேட்டுகளை ஜமீன்தாரிமசோதாவுடன் சேர்க்கநேர்மையான வழியில் பாடுபடும்பிரமுகர்களுக்கும் சட்டசபை அங்கத்தினர்களுக்கும் எங்கள் நன்றியும் வந்தனமும் உரித்தாகுக.

10. சென்னை அக்டோபர் 9உல் ஸ்ரீமான்கள் வேதரத்தினம் பிள்ளை M. L. A., K. நடராஜன் M. L. C., S. Rm. ராமனுதன் செட்டியார் M. L. C., தியாகராஜ சோழகர் M. L. A., P. வெங்கட்ராமய்யர் M. L. A., N. ரெங்கசாமி ரெட்டியார் M. L. A., M. மாரிமுத்து M. L. A., ஆகியோர் இனம் மசோதாவைப் பற்றிக் கையொப்பமிட்ட கூட்டறிக்கையை இனம் கிராமத்திலுள்ள ரயத்துக்கள் ஏகமனதாக நிராகரிக்கிறோம்.

11. தமிழ்நாட்டு இனமைப்பற்றி ஆந்திர தோழர்கள் நன்றாக உணரவில்லையென்று சொல்லியிருப்பதை நாங்கள் மறுக்கிறோம். ரிவினியூ மந்திரி அவர்கள் தென்னாட்டில் ஒவ்வொரு இனம் கிராமமும் விஜயம் செய்து, இனம் குடிகளின் கஷ்ட நஷ்டங்களை நேரில் பார்வையிட்டதின் பேரில்தான், ஏழை மக்கள் அடிமையினின்றும் விலக வேண்டும் என்று மன உறுதி கொண்டு இந்த இனம் மசோதாவை கொண்டு வந்தார். ஆனால் மக்கள் என்றும் இனம்தாரிகளுக்கு அடிமையாக இருக்கவேண்டுமென்று கருதும் சுயநலக்காரர்கள் ஷை மசோதாவை எதிர்க்கிறார்கள். ஏனெனில் இனம்தாரர்களின் உண்மை என்ன என்பது தெரிந்தும் தெரியாதுபோல் நடிக்கும் சுயநலக்காரர்கள்.

12. ஜெமீன்தாரி மசோதாவுடன் இனம் ஒழிப்பு மசோதா சேர்ப்பதைப் பற்றி, தமிழ் நாட்டில் எங்கும் குதூகலமான வரவேற்புத்தான். ஆனால் ஷையார்கள் கூட்டறிக்கையில் சொல்லியிருப்பது முற்றிலும் உண்மைக்கு நேர்விரோதம்.

13. ஷை மசோதாவினால் பணக்கார நிலச்சுவான்தார்களின் உரிமைகள்தான் பறிக்கப்படுமேயன்றி, ஏழை நிலச்சுவான்தார்களின் உரிமைகள் பாதுகாக்கப் படுகிறது."

9-ம் பக்கத் தொடர்ச்சி

கிலே அவை உள்ளன. இன்னுமோர் இரண்டாண்டுகள், மக்களும் தலைவர்களும், கண் விழிப்பாக இல்லாவிட்டால், சுயாட்சி சுக்கு நூறாகும் என்று விஷயமறிந்தோர் விசாரப்படுகின்றனர். முன்பெல்லாம் தலைவர்களின் அறிக்கைகள் தீப்பொறி கிளப்புவனவாக இருக்கும். இப்போது அவ்விதம் இல்லை. சமரசத்தின் அவசியத்தை உணர்ந்து சர்வதேசக் கண்ணோட்டமும் இங்கு பாய்கிறது என்பதை அறிந்து, அவர்கள் அறிக்கைகள் விடுகின்றனர்—அடிக்கடி கூடிப் பேசுகின்றனர்—நிலைமையில் உள்ள நெருக்கடியைப்பற்றிஉண்மையிலேயேகவலைப்படுகிறார்கள். ஆனால் பத்திரிகைகள் சில, பொறுப்பற்ற முறையிலே, விஷமத்தனமான பிரசாரம் புரிகின்றன. வடநாட்டு இரத்தவெறியைக் கண்டிக்கவும், அடக்கவும் வேண்டிய நேரம் இது. தீர்த்துக் கொள்ளவேண்டிய பிரச்னைகளைக் கூடச்சிலகாலம், ஒத்திவைத்தாவது, இங்கு, அமைதியான நிலையை நிலைக்கச் செய்ய வேண்டும். இதற்கு, மாறான மனப்பான்மையை வளர்க்கும் யாரும் நிச்சயமாக, நாட்டுக்குப் பெருங்கேடு தேடுகிறார்கள் என்று கூறவேண்டும். மக்கள் மிக மிக விழிப்பாக இருக்க வேண்டிய காலம் இது. ஒரு மகத்தான புதிய நிலை, அன்னியாட்சி விலகிய நிலை ஏற்பட்டிருக்கிறது, இதனைச் சாதகமாக்கிக் கொள்ள, மதவாதிகள், மன்னர்கள், முதலாளிகள், முனைவர். காரணம் பல காட்டுவர்! சாக்குகள் கூறுவர். மக்கள், இந்த மாயவலையில் விழாதிருந்தால்தான் சுயாட்சிநிலைக்கும், சுகம் பிறக்கும். பல தலைமுறைகளுக்குப் பிறகு கிடைத்திருக்கும், தன்னாட்சி நிலையை, தந்திரக்காரர்களின் பேச்சில் மயங்கிக் கெடுத்துக் கொள்ளவேண்டாம் என்று மக்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம். இந்தியா பூராவும்,இங்குள்ள அமைதியை, சமரசத்தைக்கண்டு, பாராட்டுகிறது—வழி காட்டி என்று புகழ்கிறது—இந்த நல்ல நிலையைக் கெடுக்க வேண்டாம், என்று மன்றாடிக் கேட்டுக் கொள்கிறோம்.

* * *

ஒரு அவசரச்சொல், ஒரு தவறான நடவடிக்கை, ஒரு சிறுவதந்தி, ஒருதந்திரமான விஷமம், ஏற்பட்டாலும், அமைதிக்குக் கேடுவரக் கூடிய விதமான, மனநிலை இருக்கிறது. இதை அறிந்து, மக்களை நடத்திச் செல்பவர்களும், பத்திரிகைகளும் நடந்து கொள்ள வேண்டும்.

பெற்ற சுயாட்சியின் பலனை அனுபவிக்க வேண்டுமானால், சமஸ்தானாதிபதிகளின் எதேச்சாதிகாரம், மதவாதிகளின்பிடி, முதலாளித்துவத்தின் ஆதிக்கம், காட்டுராஜாக்களின் ஆதிக்கம், ஆகியவைகளிலிருந்து மக்கள் விடுபட்டு, இயற்கைச் செல்வத்தைப் பெருக்கி,வளம் சகலருக்கும் பயன்படும்படியான திட்டம் வகுத்துக்கொண்டு, மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும். அப்போது தான், சுயாட்சி பெற்றதனால், சுகப்பட்டோம் என்ற பொருள் பொருந்தும். அன்னிய ஆட்சியின் போது இங்கு ஓரே கலவரமயம் இப்போது அந்நிலை இல்லை! அப்போது தொழில் முடக்கம் — இப்போது தொழில் பெருக்கம், அப்போது, வாழ்க்கைத் தரம் மிகமட்டம், இப்போது உயர்ந்திருக்கிறது என்று உலகின் முன், பெருமிதத்தோடு நின்று பேசவேண்டும். ஏகாதிபத்யக் காவலன் சர்ச்சில் கேலிபேசக்கூடிய நிலையிலல்லவா நாடு இருக்கிறது! இதைத்திருத்துவது, நாட்டுத்தலைவர்களின் அவசரமான கடமையாகும். அகதிகள் பிரச்னையும், அதை யொட்டிப்பரவிய அமளிப்பிரச்னையும், அடங்கிவிட்டதென்று பண்டிதநேரு அறிவிக்கிறார். அகமகிழ்கிறோம். அடியோடு, அந்த அநாகரிக நிலைமாறி, எப்படிப்பட்ட சிக்கலான பிரச்னையையும், கூடிப்பேசித் தீர்த்துக் கொள்வோம், இரத்தவெறி பிடித்தலையமாட்டோம், மக்களின் வாழ்வு மதிப்புள்ள பொருள், என்ற சீரிய நோக்கத்துடன் பணிபுரிவோம், மன்னர்கள், அவர்களின் மண்டல சூத்ரதாரிகள், முதலாளிகள், வகுப்புவெறியர்கள் ஏனும் எவர், முயற்சி செய்தாலும், நாங்கள் ஏமாறமாட்டோம்—என்று மக்கள் உறுதி கொள்ளவேண்டும். பலப்பல தலைமுறைகளாக கிடைத்திராத அரிய நிலை கிடைத்திருக்கிறது, இதை மதித்து, மதிவழி நடந்து, சூழ்நிலையை மாற்றிச்சுயாட்சியின்பலனை மக்கள் அடையவேண்டும். இந்த நோக்கத்துக்காகப் பாடுபடுவதேபத்திரிகைகளின் இலட்சியமாக இருக்க வேண்டும். விஷமத்தை வளர்க்கும் வகையில் உள்ளவைகள், சாவோலைகள்!

வல்லமை பொருந்திய பிரிட்டனால் நம்மவரின் இரத்தத்தைக் குடிக்க முடியவில்லை, ஓரளவுக்கு மேல்— இதோ வகுப்புக்கலகம், ஏராளமான இரத்தத்தைக் குடித்துவிட்டது. பெரும் போரின் போது கூட ஏற்படாத அவதி இன்று வந்தது. இன்னமுமா, இந்த நிலைநீடிக்க வேண்டும்? எண்ணிப்பாருங்கள்,ஆர அமர.

✻

14-ம் பக்கத் தொடர்ச்சி

உதயம் ஆயிற்று என்பதை மக்கள் கவனிக்க வேண்டும். தென்னிந்தியாவில் பாங்குகள் சில கவிழமுன் ரிசர்வ் பாங்க் உதவி ஏன் செய்யவில்லை? சமீபத்தில் கூட ஹனுமான் பாங்குக்கு ரிசர்வ் பாங்க் ஏன் உதவி செய்யவில்லை? இவைகளை ஒவ்வொருவரும் நன்கு சிந்திக்கவேண்டும்.

இன்று ரிசர்வ் பாங்கின் மத்திய சபையை ஆட்டிவைப்பது வடநாட்டிலுள்ள பெரும் பணக்காரர்களே. அம்மாபெரும் பணக்காரர்களுக்குச் சொந்தமான பல பாங்குகள் இருக்கின்றன. அவைகள் இன்று பஞ்சாப், கல்கத்தா, கராச்சிபோன்ற பெரிய இடங்களில் சுருங்கச் சொல்லின் பாக்கிஸ்தான் தர்பார் நடக்கக்கூடிய இடங்களில் இருக்கின்றன. கலவரங்களால், மக்கள்பீதியால், பாங்கியில் போட்டிருந்த பணம் கோடிக்கணக்கில் திரும்ப எடுத்துவிட்டார்கள். இந்த நிலைமை அப்பணக்காரர்களுடைய பாங்குகளை மிகவும் பாதிக்க ஆரம்பித்துவிட்டது. ஸென்டிரல் பாங்க், பஞ்சாப் நேஷனல் பாங்க், யூனைடெட் கமர்ஷியல் பாங்க், பாரத் பாங்க் போன்ற பெரும் பாங்குகளுக்கு ஆட்டம் கண்டுவிட்டன.

இவர்களுடைய மானத்தைக் காப்பாற்றுவதற்குத்தான் இந்த ரிசர்வ் பாங்கின் புது அவசரச் சட்டம். இந்தச் சட்டத்தைப் பார்த்தால், ஏதோ ரிசர்வ் பாங்குக்கு திடீரென ஒரு ஞானோதயம் பிறந்துவிட்டது எனத்தோன்றும். இதனால் யாருக்கு நன்மை? வடநாட்டினருக்காக ஏற்பட்ட நன்மை. ரிசர்வ் பாங்க் உதவி செய்ய வேண்டுமானால் நம் நாட்டு ஹனுமான் பாங்குக்கு உதவி செய்திருக்கக் கூடாதா? அல்லது திருவிதாங்கூர் நேஷனல் பாங்குக்கு உதவி செய்யக் கூடாதா? எல்லாம் வடநாட்டினர் இந்தியா முழுமைக்கும் ஆதிக்கம் செய்யவேண்டும் என்ற ஒரே காரணத்திற்காகத்தான்."
(வியாபாரம்)

✻

4-ம் பக்கத் தொடர்ச்சி

அவர்கள் "சூத்திரர்கள்!" என்று ஆரியவர்க்கம் கூறிற்று.

உழைப்பதும், உள்ளம் உருகுவதும் அவர்களின் வாழ்க்கையாக இருந்தது.

பெரியதொரு சுமையை இடுப்பு வளைய, முதுகு முறியச் சுமந்து கொண்டு, சென்றுகொண்டே இருந்த தமிழன் தன்னைத்தான் உணர்ந்து நிமிர்ந்தான். அவன் நிமிர்ந்ததும் முதுகிலிருந்த பாரமானசுமை தொப்பெனக் கீழே இறங்கினதும் அவன் அடைந்த ஆறுதல், ஆனந்தம் இவ்வளவு அவ்வளவு அல்ல! புன் சிரிப்புடன் நின்றான்.

அவன் கீழே தள்ளிய சுமைதான் பார்ப்பனியம்!

அதைத் திரும்பவும் முதுகில் ஏற்றிக்கொள் என்று சாஸ்திரியார் கூறினால் கேட்பாரா! சொல்வதைக் கேட்கவில்லையே என்று சீறினால், சிரிக்காரா!

தேவபாஷை சமஸ்கிருதம்! அதனைப் பூசுரர் அறிவர்! அறிந்து அழகிய பாசுரம் அமைப்பர். வேதங்கள் அம்மொழியில் தான் உள்ளன. வேதகால சட்டங்கள் அம்மொழியிலேயே வெளியிடப்பட்டன. மனுவுக்கு உகந்த மொழியும் அதுவே. பார்ப்பனீயத்துக்குப் படை பலமாக விளங்கியதும் அஃதே. அம்மொழி மூலமே கதைகள் வளர்ந்தன, அந்தக் கதைகளே தமிழரை அடிமைப் படுத்தின. பார்ப்பனர் என்பவர் 'பரமனால்' பாரிலுள்ளோரை எல்லாம் ஆளவே பிறப்பிக்கப்பட்டவர் என்ற பயங்கரமான கருத்தைப் பாமரர் உள்ளத்திலே புகுத்தியது அக்கலையே.

எந்தச் சமஸ்கிருதத்தின்மீது தமிழர் வெறுப்புக் கொண்டுள்ளார்கள் என்று வெந்தமனதுடன் சாஸ்திரியார்கூறுகிறாரோ, அந்தச்சமஸ்கிருதமும் அதன்மூலம் வெளிவந்த கலையும் தமிழரைப் படுத்திய பாட்டை கொஞ்சம்எண்ணினாலும், சமஸ்கிருதத்தை ஏன் வெறுக்க மாட்டார்கள் என்று கேட்கிறோம். தம்மைப் பரம்பரை அடிமைகளாக்கி வைத்தது பார்ப்பனியந்தான் என்பதை உணர்ந்த பிறகு பார்ப்பனியத்திடம் யாருக்குப் பரிவுவரும்.?

காட்டிக் கொடுப்பதையே தொழிலாகவும் வயிற்றுப் பிழைப்பையே வாழ்க்கையின் இலட்சியமாகவும் அடிமைத்தனத்தையே அணிகலனுவும்கொண்டவர்களும் தவிரப் பிறர், தம்மை இழிவு படுத்தும் சமஸ்கிருதத்தைக் கண்டிக்காமலிரார்.

எனவே, பன்னெடுங் காலமாகத், தமிழரை அடிமைகொண்டு ஆட்டிப் படைத்து வாட்டி வதைத்த ஆரியத்தைத் தமிழர் இன்று எதிர்த்து அதன் ஆக்கம் கூடாது என்று கூறுகின்றனரே யொழிய வேறில்லை.

இதனால் அண்டம் அதிரும் பூமி பிளக்கும் என்று பூச்சாண்டி காட்டிய காலம் மலை ஏறிவிட்டது.

இது மகா ஆபத்தானது என்று பயங்காட்டினால் அதற்காகப் பிறப்புரிமையைப் பறிகொடுக்கத் துணியும் பேதைமைக் கூட்டம் இன்று இல்லை.

இன்று சுயமரியாதையைக் காத்துக்கொள்ளப் போரிடும் தமிழர்களேயுள்ளனர். அவர்கள் சாஸ்திரிகளின் சீற்றத்தைக் கண்டு சாயமாட்டார்கள், கைகொட்டித்தான் சிரிப்பார்கள்! சாஸ்திரியார் சீற்றம், காலத்தின் மாற்றத்தை ஒருபோதும் அசைக்காது.

கட்டுத்தளர்ந்துவிட்டது! கைகால்கள் சருகென உலர்ந்துவிட்டன. குத்து ஒன்றுக்குக் குப்புற ஆள்கீழே விழுந்த காலத்தை எண்ணி 'போனது வராது' என மாஜி போக்கிரி மரத்தடியில் உட்கார்ந்து யோசிக்கிறான்.

கண்ணாடி எங்கேயிருக்கிறது என விநாடிக்கொரு முறை தேடித் தேடி முகத்தைப் பார்த்து அந்த மினுமினுப்பையும் சொகுசையும் கருத்து வளைந்த புருவங்களையும், கண்ணாடி போன்ற கன்னங்களையும், குவிந்து கொஞ்சும் அதரத்தையும் சுருண்டு வளைந்த கூந்தலையும் கண்டு கண்டு களித்த காலம் போய்க், கண்ணாடியைக் கண்டால், முகத்தின் சுருக்கமும் கன்னத்தின் குழியும் உதட்டின் வரட்சியும், கூந்தலின் வெளுப்புமே தெரியுங் காலம் வந்ததும், அலங்கார மேனாமினுக்கி, "நாம் அழகாக இருந்த காலம்போயிற்றே, போனது வராது" என எண்ணுகிறாள்.

பலமிழந்த போக்கிரி பக்கத்திலே சில குட்டி வஸ்தாதுகளைச் சேர்த்து வைத்துக்கொண்டு, பழம் பெருமை பேசினாலும், அடியோடு காரியங் கெட்டுவிடாதபடி பார்த்துக் கொள்வான்.

வயது முதிர்ந்துவிட்டதால் வசீகரம் வதைக்கப்பட்ட போதிலும், சிதைந்தசிங்காரத்துக்குச் சில்லறைச் சொகுசுகள் செய்து, விகாரம் அத்தனையும் வெளிக்குத் தெரிய ஒட்டாது, அலங்காரி தடுக்கிறாள்.

அதுபோலத்தான் வர்ணாஸ்ரமும் இன்று இருக்கிறது. அதன் ஈடு எதிர்ப்பு இல்லாத காலம் போய்விட்டது. கண்டால் கிடுகிடுவென மக்கள் நடுங்கும் காலம் போய்விட்டது. இப்போது எங்கும் இடி, கண்டனம், தாக்குதல் என்றாகிவிட்டது. எனவே வர்ணாஸ்ரமம் பழங்காலப் போக்கிரி படைசேர்ப்பது போலவும், அந்நாள் அலங்காரி அழகுப் பூச்சுகளை நம்புவதுபோலவும், தேசீயத்தை நம்பி அதை முலாமாகக் கொண்டு மினுக்கிப் பார்க்கிறது. பகுத்தறிவுக் கண்கொண்டு பார்ப்போருக்கு, அந்த முலாம் எதன்மீது பூசப்பட்டு இருக்கிறது என்பது விளங்கும். காலத்தின் போக்கை உணர்ந்தோருக்கு இனி ஒரு நாளும் அந்த வர்ணாஸ்ரமம் பழையபடி நிலைத்து நிற்காது என்பது விளங்கும். மக்களின் எழுச்சி அடங்காது. அந்த எழுச்சியின் முன்பு, எதுதான் நிற்கும்? ஜார் நிற்கவில்லை! பிரன்சுக் குபேரர்கள் நிற்கவில்லை! கொடுங்கோலர் யாருமே நிற்கமுடியவில்லை. குப்புற விழுந்தனர்! வர்ணாசிரமும் விழும் கீழே, தவிடு பொடியாகும். மீண்டும் உருப்பெற்று எழ முடியாதபடி அழிக்கப்படும் என்பது உறுதி.

2-ம் பக்கத் தொடர்ச்சி

வழைத்து மீண்டும் நமது குருகுலங்களில் ஆசிரியர்களாக அமர்த்துவது மிகவும் நல்லது. கலியுக ஜனகர் என அழைக்கப்படும் ஓமந்தூரருக்கு இது சாதாரண விஷயம்! ஆனால் அந்த மகரிஷிகள், தங்கள் நாரிமணிகளையும் இங்கு அழைத்து வாராமல் இருக்கவேண்டும்! பஞ்சத்தைப் பற்றிப்பாட்டிசைத்து, அரசி போடுங்கள் எனத்திருவோட்டுத்திருவிழா முன்னர் நடத்தினர். அதில் அவருக்குள்ள ஆற்றலைக் கண்டு, அலுவலுக்கேற்ற அமைச்சர் எனப் பலரும் 'சபாஷ்' கூறினர். அந்தத் தகுதியான காரியத்தைச் செய்வதை விட்டு விட்டு, ஏன் இந்த வீண் வேலைக்கு வந்தாரோ?

# மொழிப் போராட்டம்

[இரா. நெடுஞ்செழியன்]

வெள்ளையர் ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட இந்திய துணைக்கண்டம், எந்த மொழியை அரசியல் மொழியாகக் கொள்ளவேண்டும் என்பது பற்றிப் பலரும் தங்கள் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். இந்தியா என்றும் பாகிஸ்தான் என்றும் பிரிந்த இரண்டு பகுதிகளும் தற்பொழுது ஆங்கிலத்தையே அரசியல் மொழியாகக் கொண்டுள்ளன.

பாகிஸ்தான் கவர்னர் ஜெனரலான முகமதலிஜின்னா, பாகிஸ்தான் அரசியலமைப்பு மன்றம், ஆங்கிலத்தையே ஆளும் மொழியாகக் கொள்ளும் என்று கூறியிருக்கிறார். இந்திய ஆட்சியில் ஆளப்படும் மொழி இந்துஸ்தானியாகத்தான் இருக்கவேண்டும் என்று தோழர் காந்தியார் தன் வழிபாட்டுக் கூட்டங்களில் எடுத்துக் கூறிவருகிறார். காங்கிரஸ் தலைவர்களில் பெரும்பாலோரும் இந்திதான் பொதுமொழியாக வேண்டும் என்று ஆங்காங்கு விளக்கி வருகிறார்கள். இந்திய அரசியலமைப்பு மன்ற நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்தால் இந்தியையோ அல்லது இந்துஸ்தானியையோ பொதுமொழியாகக் கொண்டு, அதனையே அரசியல் மொழியாக ஆக்கிவிடுவதற்கான திட்டங்கள் தீட்ட முயற்சிப்பது விளங்கும். இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும், விரைவில் இந்தியை அல்லது இந்துஸ்தானியைப் பொது மொழியாக மட்டுமல்லாமல் அரசியல் மொழியாகவும் புகுத்துவதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. "மாகாணங்களுக் கிடையே பேசுவதற்கான பொது மொழி ஒன்றை யூனியன் கொள்ளவேண்டும். நான் ஒருபடி மேலே சென்று கூறுவதானால் இரண்டு பகுதிகளும் (இந்தியா, பாகிஸ்தான்) இந்துஸ்தானியையே தங்களுக்குள் பொது மொழியாகக் கொள்ளவேண்டும்.... ...........அவர்கள் இரண்டுவித வரிவடிகளையும் (உருது, தேவநாகரி) கற்றுக்கொள்ள வேண்டும். இந்திய யூனியனிலுள்ள இந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்கும் இது ஒரு சோதனையாகும்" என்று தோழர் காந்தியார் 5—10—47ம் நாள் வெளியான 'அரிஜன்' இதழில் எழுதியுள்ளார். அதற்கேற்றாற்போல் ஐக்ய மாகாணத்தில் இந்தி அரசியல் மொழியாக ஆக்கப்பட்டுவிட்டது. சென்னை மாகாண அரசியலார் ஆட்சி பீடம் ஏறிய காலத்திலிருந்து இந்தியைப் பரப்ப எடுத்துக்கொள்ளும் அக்கறையைப் பார்த்தால் அதனைப் பொது மொழியாகவும், அரசாங்க மொழியாகவும் ஆக்கத்தான் போலும் என்பது புலப்படும். சென்னை மாகாணத்திலுள்ள ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் இந்தி ஆசிரியர் இருக்கவேண்டும் என்ற முறையைக் கொண்டுவந்துள்ளனர் சென்னை அரசியலார். விருப்ப பாடமாக இன்று வைக்கப்பட்டுள்ள இந்தி, நாளடைவில் கட்டாய பாடமாக ஆகவும்கூடும். இந்த நிலையில் பொதுவாகத்தென்னாட்டாரும்குறிப்பாகத் தமிழ் நாட்டாரும் அரசியல் மொழி, பொதுமொழி ஆகியவற்றைப்பற்றிச் சிந்தித்து முடிவு கட்டியாக வேண்டும்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் உள்நாட்டவரான தமிழர்களோடும், வெளிநாட்டவரான வேறு மொழியாளர்களோடும் பழக வேண்டிய இன்றியமையாமை ஏற்படுகிறது. தமிழர் தாம் ஒருவரோடொருவர் பழகக்,கொள்ளும் மொழி—கொள்ளக்கூடியமொழி தாய்மொழியாகும். தமிழ் நாட்டில் தாய் மொழி தமிழ் மொழி. ஆகவே தமிழ் வழங்கும் நிலவெல்லைக்குள் வாழும் மக்களனைவர்க்கும் அன்றாட வாழ்க்கையில் நின்று உதவும் மொழியாகிய தமிழ் தான் அரசியல் மொழியாக வேண்டும். மொழிப்பற்றில் மேம்பாடெய்தி விளங்கும் வங்காளிகள் தாம் வாழும் மேற்கு வங்காளப் பகுதியில், இனி அரசியல் மொழி தாய் மொழியான வங்காளமாகும் என்று தீர்மானித்து விட்டனர். அஸ்ஸாம் வாழ் மக்களும் தங்கள் தாய் மொழியே தங்கள் அரசியல் மொழியாக விளங்கவேண்டும் என்று முடிவு செய்து விட்டனர். மத்ய மாகாணமும் அரசியல் மொழி தாய் மொழியான இந்தி என்று சொல்லிவிட்டது. அதுபோலத்தமிழகத்தில் தமிழ்தான் அரசியல் மொழியாக ஆகவேண்டுமே தவிர, வடநாட்டு இந்தியோ, இந்துஸ்தானியோ தமிழகத்தின் அரசியல் மொழி ஆகமுடியாது — ஆகக்கூடாது. மத்ய அரசாங்கம் முடிவு செய்துவிட்டது — காந்தியார் கூறிவிட்டார் என்ற காரணத்துக்காக இந்தி அல்லது இந்துஸ்தானி அரசியல்மொழியாகத்தமிழ் மக்கள்மேல் திணிக்கப்படலாம். அந்த நிலை ஏற்படாவண்ணம் தற்காத்துக்கொள்ள வேண்டிய பொறுப்புத் தமிழ் இளங்காளைகளின் நீங்காக் கடமையாகும்.

இந்தி, இந்தியாவின் பெரும்பாலான மக்களால் பேசப்படுவதாகவும், ஆகவே அதுவே பொதுமொழியாகவும், அரசியல் மொழியாகவும் ஆவதற்கு ஏற்புடைத்தாகும் என்று கூறுவர். தென்னாட்டில் திராவிடப் பகுதியை எடுத்துக் கொண்டால், திராவிடக் குழு மொழிகளான தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளைப் பேசும் மக்கள் தான் நிரம்பியுள்ளனர். இந்திய அரசியலமைப்பு மன்றத்தாரால் (Constituent Assembly) வெளியிடப்பட்டுள்ள புள்ளி விவர கைப்புத்தகத்தின் (Statis tical Hand book) மூன்றாம் பக்கத்தில் கீழ்க்காணும் மக்களெண்ணிக்கைக் கணக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. (இந்திய யூனியனில் சேர்ந்திருப்போர் மட்டும்)

| | | |
|---|---|---|
| தமிழ் பேசுவோர் | : | 18,517,415 |
| தெலுங்கு ,, | : | 16,840,433 |
| மலையாளம் ,, | : | 3,726,699 |
| கன்னடம் ,, | : | 1,672,590 |

திராவிடக் குழுமொழி பேசும் மக்கள் 40,757,137க்குக் குறையாமல் இருக்கிறார்கள். இந்துஸ்தானிபேசும் மக்கள் நூற்றுக்கு மூன்று பேர் என்ற எண்ணிக்கையிலதான் திராவிட நாட்டுப் பகுதியில் வாழ்கிறார்கள். மிகக் குறைந்த அளவு பேசும் மக்களின் மொழி தமிழகம் உள்ளிட்ட திராவிடப் பகுதிக்கு எங்ஙனம் அரசியல் மொழி ஆகமுடியும்! ஆகவே தமிழ் மொழியைத் தவிர்த்து வேறுஎந்த மொழியேனும் தமிழகத்தின் அரசியல் மொழியாக ஆக்கப்படுமாயின், மற்றுமோர் மொழிப் போராட்டம் துவக்கி அறப் போர்க்களங்கள் காணவேண்டிய கடப்பாடு தண்டமிழ் மக்களைச் சாரும். வேற்று மொழியினை அரசியல் மொழியாகப் புகுத்தும் எண்ணம் ஆளவந்தாரிடையே வலுவடையு முன்னர், தமிழையே தமிழகத்தின் அரசியல் மொழியாக ஆக்கவேண்டும் என்ற கருத்தை

ஆளவந்தாரிடம் தெரிவிக்கத் தமிழ் மக்கள் எல்லோரும் முனைய வேண்டும்!

அரசியல் மொழி தமிழாகும் என்று வற்புறுத்திய பிறகு, வேற்று மொழியாளரோடு தொடர்பு கொள்ளப் பொதுமொழி ஒன்று தேவைப்படுகின்றது. மேற்கு வங்காளத்தைப் போல் தமிழகம் தாயக மொழியை அரசியல் மொழியாகக் கொண்ட பிறகு மத்ய அரசாங்கத்தோடும், மற்ற மாகாணங்களோடும் தொடர்பு வைத்துக்கொள்ள இந்தி அல்லது இந்துஸ்தானி இந்தியாவின் பொது மொழியாக இருக்கட்டுமே என்று கூறுவர். இந்தி, இந்தியாவின் பொதுமொழியாக வேண்டும் என்று வடநாட்டவரனைவரும், தென்னாட்டுக்காங்கிரஸ்காரர்பலரும் கூறுகின்றனர். சிலர் உலகப் பொது மொழியான ஆங்கிலமே இந்தியாவின் பொது மொழியாக ஆக வேண்டும் என்று கூறுகின்றனர். யாருக்கும் அடிமைப் படாது தனித்துத் தன் மொழியைக் கொண்டு வாழும் தமிழகம் வெளி உலகத்தோடு பழக வேண்டிய நிலையில், எந்த மொழியை ஏற்றுக் கொண்டால் தமிழகத்திற்கு பலன் ஏற்படும் என்பதைக் காண வேண்டும்.

இந்தி, வடநாட்டில் பெரும்பாலோரால் பேசப்படுகிறது, — காங்கிரஸ் தலைவர்களில் பெரும் பாலோர் இந்தி பேசுகின்றனர்—காந்தியார் ஆதரிக்கிறார்— அவர்கள் அறிவுரைப் படி நடக்கும் காங்கிரஸ் ஆட்சிசெலுத்துகிறது என்ற காரணங்களால் இந்துஸ்தானியை இருவேறு வரிவடிவில் கற்றுக்கொண்டு பொதுமொழியாகக் கொள்ள வேண்டும் என்ற நிலை வற்புறுத்தப் படுகிறது. மக்களின் நேரமும் நினைப்பும் தாய் மொழிக்குச் செலவிடப்பட்டு, எஞ்சும் நேரமும் நினைப்பும் வேறுயாதேனும் ஒரேஒரு பொது மொழிக்குத் தான் செலவிடக் கூடும் என்ற நிலையில், பொதுமொழி ஆகவேண்டியது இந்தியா, அல்லது இங்கிலீஷா என்று துருவி ஆராய்ந்து ஒரு முடிவுககு வரவேண்டியதாகிறது.

ஆங்கிலம் தெரிந்தால் உலகம் முழுவதும் தொடர்பு கொள்ள ஏதுவாகிறது; இந்தி தெரிந்தால் இந்தியாவில் அதிலும் ஒருகுறிப்பிட்ட சில பகுதிகளில் மட்டுந்தான் தொடர்பு கொள்ளமுடியும். உலகம் முழுவதும் தெரியாது. தெரிய வேண்டுமென்றால் ஆங்கிலத்திலிருந்து இந்தி மொழிபெயர்த்து மற்ற மொழிக்குக் கருத்துக்களைக் கொடுக்கவேண்டும். உலகிலுள்ள எம்மொழி விஞ்ஞானத்தையும் ஆங்கிலம் தன் மொழியில் கொடுக்க முடியும்; இந்தியால் கொடுக்க இயலாது. உலகின் எம்மொழியிலுமுள்ள இலக்கியங்களனைத்தையும் கோடிக் கணக்காக நாடோறும் மொழி பெயர்த்துக் கொடுக்கும் மொழி ஆங்கிலம்; அதனைச் செய்ய இந்தி ஆற்றலற்றது. ஆங்கிலம் புரியும் ஆயிரமாயிரம் நன்மைகளை இந்தியால் புரிய இயலாது. ஆகையால் இந்தியாவுக்காக இந்தியைக் கற்றுக்கொண்டு, உலகத்துக்காக ஆங்கிலத்தைக் கற்றுக்கொள்ள வேண்டிய இரட்டைத் தொல்லை ஏற்படாமல், தமிழ்மக்கள் தங்களைக் காத்துக் கொள்ள வேண்டுமென்றால், இந்தியாவுக்கும், உலகத்துக்கும் சேர்த்து ஆங்கிலத்தைப் பொது மொழியாகத்தேவையானவர்கள்மட்டும்கற்றுக்கொள்வதென்பதே சாலச்சிறந்த வழியாகும். ஒருவன் தனிப்பட்ட முறையில் எத்தனை மொழிகள் வேண்டுமென்றாலும் கற்றுக் கொள்ளட்டும். அதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையுமாகும். அரசாங்கம்எல்லோர்க்கும் கட்டாயமாகச் சொல்லிக் கொடுக்க வேண்டிய மொழி நாட்டு மொழியான அரசியல் மொழியாகும், குறிப்பிட்டவர்களுக்கு அவர்கள் இருக்கும் துறைகள் நோக்கிக் கட்டாயமாகச் சொல்லிக் கொடுக்கப்படவேண்டிய மொழி பொது மொழி. மற்றவை விரும்பிக் கற்றுக் கொள்பவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கப் படவேண்டியவை. அரசியல் மொழியும், பொது மொழியும் எல்லாப் பள்ளிக் கூடங்களிலும் பயிற்றுவிக்கப் படவேண்டிய மொழிகள். ஏனை மொழிப்பள்ளிகள் ஓரிரு இடங்களில் மட்டும் இருந்தால் போதும்.

ஆங்கில மொழியே இந்தியாவின் பொது மொழியாக இருக்கவேண்டும் என்ற கருத்தை, மத்ய மாகாணத்தைச் சேர்ந்த சாகர் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் (சர்) ஹரிசிங் கௌர் அவர்கள் 6-10-47 (சென்னை) 'இந்து' செய்தித்தாளில் எழுதியிருப்பதாவது:—"பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவில் ஏற்பட்ட காலத்திலிருந்து ஆங்கில மொழியானது திராவிடர், ஆரியர் என்ற இரண்டு கூட்டத்தாராலும் பயிலப்பட்டு வருகின்றது. இன்று பொது உபயோகத்திற்கும், அறிவு விளக்க முறைக்கும் இது பொது மொழியாகக்கொள்ளப் பட்டுவிட்டது. உலகில் வேறொரு மொழிக்கு இது இரண்டாவது என்னும் நிலையில்லாமல் பெருவாரியான இலக்கியக் களஞ்சியங்களைக் கொண்டிருக்கிறது. அமெரிக்கா முழுவதும், ஐரோப்பாவின் பெரும் பகுதியும் இதனையே பேசும் பொது மொழியாகக் கொண்டிருக்கின்றன. பிரிட்டிஷ் மக்கள் கடல்மேல் வாழ்வு நடாத்தும் மக்களாக இருந்ததால், தங்கள் வாணிபத்தோடு கூடமொழியையும் உலக முழுவதும் உடன் கொண்டு சென்றனர். ஒரு நூறுண்டுக்குமேலாகக் கிரேட்பிரிட்டன் உலகில் பெரிய வல்லரசாக இருந்ததால், பசிபிக் தீவுக் கூட்டங்களையும் தென் கடல்களையும் எட்டும் அளவுக்குத் தன் மொழியை இபற்கையாகப் பரவும்படி செய்துவிட்டது. இந்தியாவில் நடைபெற்ற ஆசிய உறவுடை நாடுகளின் மாநாட்டில் குழுமியிருந்த பல்வேறுநாட்டுமக்கள், கலந்து உரையாடற்குக கொண்ட மொழி ஆங்கில மொழியாகும். பிரிட்டிஷ் ஆட்சிஇந்தியாவில் மறைந்தது; எனினும், ஆங்கில மொழி பொதுவாக உரையாடு மொழியாக இருந்து வருகிறது. இந்த மொழியின் மூலமாகத் தான் வானொலி, கம்பியில்லாத் தந்தி, தந்தி முதலிய சாதனங்கள் உலகத்தின் எல்லாப் பகுதிகளும் ஒன்றிற்கொன்று தொடர்பு கொள்ளும்படி செய்யப்படுகின்றன. வளத்திலும், வன்மையிலும் இதனோடு இணையாகச் சொல்லக்கூடிய பேசும் மொழி வேறு எதுவும் கிடையாது. வெள்ளையர் ஆட்சியின்மீது கொண்டிருந்த வெறுப்பின் காரணமாக இதுகாறும் இந்தியாவின் பொது மொழியாக இருந்த ஆங்கில மொழியைப் புறக்கணிக்கக் கூடாது." என்பதாகும்.

உலகப் பொது மொழியாகிய ஆங்கில மொழியே இந்தியாவுக்கும் பொது மொழியாக ஆகவேண்டும். தமிழகத்தின் அரசியல் மொழி தமிழாகவும், ஆந்திரத்தின் அரசியல் மொழிதெலுங்காகவும், கேரளத்தின் அரசியல் மொழி மலையாளமாகவும், கர்னாடகத்தின் அரசியல் மொழி கன்னடமாகவும் அமையும்! அவற்றின் கூட்டாட்சியில், பொதுமொழி ஆங்பிலமாக அமையவேண்டும்! ஆங்

(அடுத்த பக்கம் பார்க்க)

# பல்கலைக்கழகத்தில் பஜனை

★

குற்றஞ்செய்ததில்லை, தண்டிக்கப்படுகிறார்கள்; கொடியவர்கள் புகழப்படுகிறார்கள்; பாடுபடுபவர்கள், பயன் காண்பதில்லை; உழைப்பறியாதவர்கள், உல்லாச புரியில் உலவுகிறார்கள்; மக்களை மதியாதவர்கள், ஜீவகாருண்ய சீலர்களெனச் சித்தரிக்கப் படுகிறார்கள். இவைகள் இன்றைய தினசரிக் காட்சிகள்.

இந்நிலை சீர்படவேண்டும். செம்மையாக்கப்படவேண்டும். இக்குறைபாடுகள் களையப்பட வேண்டும். மீண்டும் இக்கேடுகள் மக்களைப் பீடிக்காவண்ணம், வழிவகை வகுக்கவேண்டும். வகுத்ததை, வழுவாது காக்கவேண்டும்.

இந்நிலை எய்த மக்களின்மடைமை போகவேண்டும். பழைமைப் பற்று படியவேண்டும். சிந்தனைக்கு முதலிடம் இருக்கவேண்டும். குறிப்பிட்ட ஒரு காலத்தில், சில பொருட்களுக்குக் கற்பிக்கப்பட்ட சிற்சில சிறப்புகள், சீர்குலைந்து விடும சில நாள் சென்றபின். கால நிலை அறியாது, சீர்குலைந்த சித்திரத்தைக் காட்டிக் காக்கமுயல்வது மடைமை. அதனைக் கண்டு, தங்கள் வாழ்வை மக்கள் சரிசெய்து கொள்ளவேண்டுமெனப் போதிப்பது, அறிவுலகத்திற்கு அறிந்தோ அறியாமலோ கொடுக்கப்படும் தண்டனையாகும்.

காலம் மாறக்கூடியது. மாறிக்கொண்டுதான் இருக்கும். காலத்திற்கேற்பக்கருத்தில்மாற்றம் வேண்டும். மாறாத சமுதாயம் மறைந்துவிடும். வரலாற்றிலே, பல ஏடுகள் உண்டு, இதனை மெய்ப்பிக்க.

முன்னோர்கள், காட்டிய வாழ்வு, காட்டிய பாதை, தீட்டிய திட்டம், சிறந்தவைகளாக இருக்கலாம். நமக்காக, அவைகளை அவர்கள் செய்யவில்லை. அன்று நாம் இருந்ததில்லை. இன்று நமக்குள்ள தேவை, குறைபாடு, வசதி ஆகிய இன்னோரன்ன அவர்களுக்குக் கிடையாது. அவர்கள் காலம் வேறு. அவர்களுக்கு இருந்த தேவை வேறு. அதனைப் பெறும் சாதனமும் வெவ்வேறு. அவைகளுக்கேற்ப, அமைத்துக்கொண்டனர் வாழ்வளிக்கும்திட்டத்தை. அந்தக் காலத்தின் இன்றியமையாமைக் கேற்ப, கிடைத்த வசதியை வீணாக்காமல், அறிவை உறுதுணையாகக் கொண்டு, வாழ்வின் சூட்சமத்தை நன்குணர்ந்து, வாழ்ந்து மறைந்தனர். எனவே அவர்கள் மேற்கொண்ட முறைகள், அவர்களுக்குப் பயனளித்ததுபோல் நமக்குப் பயனளிக்கும் என எதிர்பார்த்தால் முடியுமா?

* * *

கல்லோடு கல்லை உராய்த்து, தீயெழுப்பும் காட்சி, அதனைக் கண்ட அந்தக் காலத்து மக்களுக்கு, ஆச்சரியம் நிறைந்த அற்புதமாகத்தான் இருந்திருக்கும். அத்துடன் அவர்கள் திருப்திகொள்ளவில்லை. அதுவே அறிவின் முடிந்த எல்லையென்று, அன்று நம்பினவர்களில்லை. மேலும் மேலும் அந்த அறிவைப் பெருக்கினர். மின்சார விளக்கொளியில் வந்து நிற்கிறோம். இது மேலும் வளரும். இந்த இரு புதுமைகளுக்கும் உள்ள இடைக்காலம், அறிவைத் துணைகொண்டு வளர்ந்ததா, அல்லது பழைமை மோகங்கொண்டு எழுந்ததா? சிந்தனைச் சிற்பிகளால் இம்மாறுதல் உண்டாயிற்று, அல்லது ஜீவன் முத்தர்களால் இவை ஏற்பட்டதா?

கற்களால் தீப்பொறி கிளப்பிய காலத்தில், அதனைக் கண்டு சீற்றம் கொண்டோரும், பெரியதோர் ஆபத்து வரஇருக்கிறது எனச்சாபம் தந்தோரும், புதுமை கண்டவனைத் துன்புறுத்தியோரும் உண்டு. இருந்தாலும் உண்மையை உலகுக்கு உணர்த்தினான். தன்னையே அதற்காக அர்ப்பணித்துக் கொண்டான். உலகம் நலம் பெறக்கண்டு, தான் இன்புற்றான். நிற்க,

சுயலாபம் கருதாது, சொந்த நன்மையை மட்டும் குறியாகக் கொள்ளாது, ஆராய்ச்சி செய்வதில் தணியாத காதலும், பிறர் நலத்தில் பெரு விருப்பமும் கொண்டு பணிபுரிந்த பண்பினராக நமது மக்கள் இருக்கவேண்டும். அவர்களே விடுதலை பெற்றவராவர். உரிமை வேட்கை உடையவர்களாவர்.

இந்நிலையை நாட்டில் உண்டாக்கும் வாய்ப்பும், தகுதியும் நமது கல்லூரி மாணவர்களுக்கே உண்டு. அவர்கள் பெற்ற கல்வியை ரூபா அணாபைபால் அளந்து பார்ப்பின் குறைவுடையதாக இருக்கும். அவர்கள் பெற்ற கல்வியை, மக்களுக்குப் பலனளிக்கும் முறையில் பயன்படுத்தவேண்டும். அதனை ஆளவந்தவர்கள் நடைமுறைகளுக் கொணர வேண்டும். அதற்கான நல்லதோர் ஏற்பாடு ஒன்றும் செய்யாமல், கற்று வெளியேறுபவர்களைக் குறைமதி கொண்டு குற்றம் கூறுவது, ஆளுவோருக்குத் தரப்பட்டுள்ள தகுதியையும் கடமையையும் தட்டிக்கழிப்பதாகும்.

வாய்மை, தூய்மை, அன்பு, அகிம்சை ஆகிய பண்பாடுகள் கொண்டவர்களாக, மாணவர்கள் விளங்கவேண்டுமென்று எதிர்பார்ப்பதும், இதோபதேசம் செய்வதும் கவைக்குதவாது. காட்டுக்கூச்சலாகவும் முடிவுறும். கடமையைத் தெரிந்தவர் செயலுமாகாது.

பல்கலைக் கழகங்களில் பயிற்சி பெறும் மாணவர்கள், பற்பலகலை

(2-ம் பக்கம் பார்க்க)

19-ம் பக்கத் தொடர்ச்சி

கிலம் பொதுமொழியாக அமைந்தால் தமிழகத்தின் நிலை உலகில் தலைதூக்கி நிற்க ஏதுவாகும். அதனால் ஆங்கிலேயரின் ஆதிக்கம் ஏற்பட்டுவிடும் என்று இனி அஞ்சவேண்டியதில்லை. ஆனால் தேவையில்லாத— வேண்டாத —வளமில்லாத-அடிமைகொள்ள வேண்டும் என்று எண்ணத்தோடு புகுத்தப்படும் இந்தியை இன்பத் தமிழகம் ஏற்காது என்பதைத் தமிழ்மக்கள் நிலை நாட்ட வேண்டும். தமிழகத்தின் அரசியல்மொழி தமிழ்! பிறவற்றோடு உறவு கொள்ளும் பொது மொழி ஆங்கிலம்! என்று எத்திசையும் அதிர முழங்குவோம். வேண்டாத இந்தி அல்லது இந்துஸ்தானி மீறிப் புகுத்தப்பட்டால், பெருங்களம் புகும் பெரு வழியை மேற்கொள்ளுவோமாக!

Edited Printed Published by C. N. Annadurai, M. A., at "Dravida Nadu" Press,
817—819 Hodgsonpet Conjeeveram.